(Registered as a Newspaper in Ceylon)
P. M. G. No. H. A. 59/300 of 1939.

யுத்தகாலப்பிரசுரம்

உ
சிவமயம்.

விரோதி ஹு (1889) ஆவணி மீ
உஅ உ ஆரம்பமானது

இந்துசாதனம்

பத்திரக்கிரயம்

வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினஎல்லைக்குள்

தமிழ் ரூபா	5 00	இங்கிலீசும் தமிழும்	9-00
இலங்கை இந்தியா	8-00	இங்கிலீசும் தமிழும்	12-00
தொலைவாய்ப்பகுதி	9-00	இங்கிலீசும் தமிழும்	13-00

தனிப்பிரதி சதம் 5
முற்பணமனுப்பினலன்றிக் கவனிக்கப்படமாட்டா.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.
—அப்பர் சுவாமிகள்

விளம்பர விகிதம்

முதன்முறைக்கு

ஒருகலம் ரூபா	10-00	அரைக்கலம் ரூபா	5-50
கால்கலம் ரூபா	4-00	ஒருஅங்குலம் ரூ.	1-00

அடுத்தமுறைகட்கு மேற்படி விகிதங்களிற்பாதி
காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

[புத்தகம்—ருக] யாழ்ப்பாணம்: — பிரமாதி ஹு கார்த்திகைமீ கஉ (1939 நவம்பர் 16 வியாழக்கிழமை) [இலக்கம் கூ0]

அபிமானம்.

பிரம்மஸ்ரீ. இ. குருஸ்வாமிக்குருக்கள்
(பாடசாலைகளின் மனேஜர் கைதடி)
அவர்கள் எழுதியுதவியது.

(முற்றொடர்)

நம் நாட்டாருக்குப் பூர்வீகம்முதல் சமயாபிமானமே சிறந்ததாயிருந்த தென்பதுயாவருமறிந்ததே. இக்காலத்தில் அவ்வபிமானத்திலே நம்மவர்க்குச் சிரத்தை மிக்குறைவு. எத்தனையோ மூடர்கள் தம் பரம்பரையையுந் தலைமையையும் கவனிக்காது கல்யாணத்திற்காகவும், சிநேகிதர் என்ற முறைக்காகவும் தம் சமயத்தினை இழக்கின்றனர். இழந்தார்க்குதவியுஞ் செய்கின்றார்கள். இவர்கள் எவ்வளவு படுபாதகஞ் செய்யுஞ் சமயத்துரோகிகள் என்பதனை உணர்கின்றார்களில்லை. பறங்கியர்களும் ஒல்லாந்தர்களும் நம் தேயத்தையாண்ட காலத்தில் அரசினருடைய கடுஞ்சட்டம் சமய ஒழுக்கத்திற்கு மாறாக இருந்தும் அதற்கஞ்சாது, தம் சமயாபிமானமே பெரிதெனக் காட்டி நம்முயிரினையும் அரசதண்டனையையும் பொருட்படுத்தாது தம்சமயஸ்தாபனஞ் செய்துவந்திருக்கின்றார்களே. அப்படிப் பாடுபட்ட முன்னோரின் உதாரக்களிகளல்லவா நாங்கள். அக்காலத்திலே பிங்கான்களிலன்றி இலை முதலியவற்றில் இட்டு உண்ணக்கூடாதென்பது அரசினர் சட்டமாம். அதனால் அச்சமூகம் விரதகாலங்களில் உண்ட இலையை வீட்டின் இறப்பினுட் சொருகிவைத்து மறைத்த வழக்கம் காணலாம். அக்காலத்தில நம் முன்னோர்கள் தமமுயிரினுஞ் சிறந்தது சமயாபிமானமே என்பதை நாட்டி வைத்த நல்லெண்ணமே இன்றும் நின்று நிலவி வருகின்றது. இது மறுக்கொணு உண்மை. அக்காலத்திலே அரசினருதவியின்றிப் பாடுபட்டுழைத்த தம் பொருளைத் தாமே கொடுத்துத்தம் வீடுகளிலேயேஉபாத்தியாயரை இருத்தித் தம் பிள்ளைகட்கு வேண்டிய சமயபாடங்களையும் சமயத்திற்குரிய அறிவு நூல்களையும் படிப்பித்து வந்தனர். பெரும் பொருளைச் செலவிட்டுச் சைவப் பிரசாரகர்களை வைத்து இடமிடங்கடோறும் மடாலயங்களிலும் தேவாலயங்களிலும் ஆலய வழிபாட்டு முறைகளையும் சமய ஒழுக்கங்களையும் பிரசங்கிப்பித்தும், புராணகாவியங்களைப் படனஞ் செய்வித்தும், மாகேசுர பூசைகள் முதலிய விசேட கருமங்களைச் சிரத்தையோடு செய்வித்தும், ஆலயவழிபாட்டினையும் விரத நியமங்களையுந் தவறாது நடத்தியும், சமயாபிமானத்துடன் வந்தனரன்றோ. அக்காலத்திருந்த சமயாபிமானத்தில ஆயிரத்திலொருபகுதிதானும் இக்காலத்தில இல்லையென்றே சொல்லலாம். இக்காலத்திலே காருண்ணியம்மிக்க ஆங்கில அரசாட்சியாரால் ஒவ்வொரு சமயப் பிள்ளைகளும் தம் சமய பாடசாலைகளிலேயே படித்தல்வேண்டுமென நடைமுறையில் வைத்திருப்பவும் அதனை நோக்காது மற்றைய மார்க்கத்தவர் நடத்தும் பாடசாலைகட்கு அரசினர் சட்டத்திற்கு விரோதமாகத் தம் பிள்ளைகளைப் படிப்பிக்கும் பொறுப்புரிமையைத் தாமே எழுதிக்கொடுத்து அப்பாடசாலைகட்கனுப்பி நம் சமய முறைக்கு மாறுன பழக்கவழக்கங்களை வாச்செய்து தமக்கும், தம் பிள்ளைகட்கும், தம் சமயத்திற்கும், தம் தேயத்திற்கும் கேடு சூழ்கின்றார்கள். ஐயையோ! இவரறிவும் அபிமானமும் இருந்தவாறென்னே.

இவ் வியாழ்ப்பாண மங்கையாய நந்தாய் மற்றைய மதத்தவரின் கைப்பட்டு வருந்த நாமெல்லாம்அவ்வசைப் பட்டு வருந்தாவண்ணம் நம் முன்னோர் செய்யும் புண்ணியமே ஒருருக் கொண்டு வந்தாலன்ன அவதாரபுருடராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின் நல்லெண்ணம்போலவே அவரது முன்மாதிரியைப்பற்றி ஞாபக மூட்டியவரும் எத்தனையோ சைவ பாடசாலைகள் வளர்கடோறுமிருக்கின்றன. இடையிடையே எத்தனையோ சைவாங்கில பாடசாலைகளிருக்கின்றன. வருடந்தோறும் அரசினர் நடத்தும் விசேட பரீட்சைகளிற் றிறமை காட்டும் விதத்தில் இந்துக் கல்லூரி தலையாய நிலையிலிருக்கின்றதே. இதனைச் சிறிதாயினுஞ் சிந்திக்கின்றார்களா? நம் நாட்டில் ஏது இருந்தாலென்?

வியபிசாரி ஒருத்திக்கு அவள் கணவனும் அவளைச் சேர்ந்தவர்களும் எத்துணை மாட்சியுடையவர்களாயினும் அவட்கு அது பொருளாகமாட்டா. அவட்கு அரபர்களின் கூட்டமே பெரிதாயிருக்கும். இச்சமயாபிமானமற்றவர்கட்கும் அறிவுடையானொருவன் புத்தி புகட்ட முன்வரின் அந்தக் கல்லூரியில் அக் குற்ற மிருக்கிறது, இப்பாடசாலையில இக்குற்ற மிருக்கிற தென்று பெரியதொரு பாரதம் பாடித் தாம செய்ததே சரியெனச் சாதித்துவிடுவார்கள். இன்னுங் கொஞ்சஞ் சமயபக்தியுடையவர்களானல் அப்பாடசாலையிலே(மறுசமயப் பாடசாலையிலே) அம்மான் படிப்பிக்கிறார். இப்பாடசாலையிலே தம்பி படிப்பிக்கிறார். அவர்களும் பிழைக்கத்தானே வேணும் என்று கூறி அபிமானத்திலே புகுதி விடுவார்கள். ஆனல் அரசினர் நேரில் சம்பளங் கொடுக்குமிக்காலத்தில் அவ்வுரிமைக்காரரும் சமயாபிமானமின்றி தமக்கும் தம் மூருக்கும் கேடுசெய்து படுகாகடை வதினும் பார்க்கத் தம் மார்க்கத்திலேயே மனதைத் திருப்பி இயன்றளவுஉதவி புரிந்து தமசமயப் பாடசாலையிலேயே இருந்து பிழைக்கச்செய்யலாமே! இது வெட்கமா? இதுவன்றோ சாதி, சமய அபிமானமாகும்.

இனி வள்ளுவநாயனரும் கற்றலினும் கேட்டலே மேலான கல்வியென்று வற்புறுத்திக் கூறியிருக்கின்றார். அதன்படி நம்முன்னோர்கள் செய்து வந்த புராணபடனம் முதலிய பிரசங்கங்களொன்றையும் அபிமானப்படுத்தாத இக்காலத்தில் சமயப்பத்திரிகைகளின் வாசிப்போவென்றால், நூற்றுக்குப் பத்துவீதமானோரிடத்துங் காண்பது அரிது. அப்படி வாசிப்பவர்கட்குத் தானும் தம்மூரிலே தம்மவரால் நடத்தப்படும் புதினப்பத்திரிகைகள் எவ்வளவு விசேடமுடையதாயிருப்பினும் அவர்கட்குப் பிடிக்காது. இவர்களுடைய அபிமானம் இருந்தபடி யென்னே.

இனி நியூஸ் News என்ற ஆங்கிலச் சொல்லைப்பற்றிக் கவனிப்போம். புதினங்கள் என்ற பொருளைத் தருவதோடு வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என்னும் நான்கு திசைகளின் பெயராய நோர்த் north ஈஸ்ற் east உவெஸ்ற் west சௌத் south என்னும் சொற்களின் முதலெழுத்துக்களினலாய ஒரு பதமாகும். எனவே நான்கு திக்குகளிலுமுள்ள தேயங்களிலிருந்து வரும் புதினங்களைக்கூறும் பத்திரிகை யென்பது கருத்து. புதினப்பத்திரிகைகளை வாசித்தலே மேலாய கல்வியும் அறிவுக்குரிய விருத்தியுமாகும். புதினம் என்பது தாம் முன்னறியாத விஷயங்களையென்பது கருத்து. நம்தேயத்திலே உதயபானு, விஞ்ஞானவர்த்தினி, ஞானப்பிரகாசம், ஞானசித்தி முதலிய எத்தனையோ பத்திரிகைகள் நின்றுவிட்டன. இதற்குக் காரணம் நம்மவர்களின் அபிமான ஊக்கக்குறைவே, நம்நாட்டிற்கு நந்தாவிளக்கனையராயிருந்து சமய ஸ்தாபனஞ் செய்த அபிமானம் மிக்க புண்ணியோத்தமராகும் ஆறுமுகநாவலரவர்களின் நல்லெண்ணத்தின் பயனுய்நம் சைவபரிபாலன சபையாரால் நடத்தப்படும் இந்துசாதனமாய இளநங்கை தன் இளமைப் பருவத்திலே பாலாரிஷ்ட தோஷங்களொன்றுமின்றிச் சமய மணங் கமழ்ந்து "நாவலர் நவில்வ நாளும் நன்றதே யாகுமென்னுப், பாவலர் பகர்ந்த பன்னுட் செல்லினும் பழுதருவே" என்னும் முதியோர் வாக்கிற் கிலக்காக நீடித்த வாழ்நாளுடன், நட்பு, பகை, கொளாமல் என்பதின்றி அஞ்சா நிலையுடன் சமய ஸ்தாபனஞ் செய்து அல்லாவிடயங்கள் வந்தவழி தக்கபடி தண்டித்து நடத்தும் வழிகளை இடித்துரைத்து இந்துக்களுக்கு முக்கிய சாதனமாகவே வளர்ந்து ஐம்பதாண்டுக்கு மேலும் பாடுபட்டுழைத்து மங்கைப்பருவ முதிர்ச்சியை யடைந்திருக்கின்றனளே. இது நம்மனோர்க்கெல்லாம் எவ்வளவு சந்தோஷமும் ஊக்கமுந்தருமாகும். ஆனல் நாமெல்லோரும் ஒன்றுபட்டு இப்பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரிப்போமேயானல் நம்பத்திரிகை தினவர்த்தமானியாகப் பெருத்துக் குறைந்த சந்தாவுடன் நிறைந்த விஷயங்களை நம்மனோர்க் கூட்டி நிலைத்துவருமென்பது நிச்சயம். நம்பெருமான் திருவருள் புரிவாராக.

திருக்குறும்பலா

பண் காந்தாரம்

தலைவாண் மதியங் கதிர் விரியத்
தண்புனலைத் தாங்கித் தேவி
முலைபாகங் காதலித்த மூர்த்தியிடம்
போலுமுது வேய் சூழ்ந்த
மலைவாய சும்புபசும் பொன்
கொழித் திழிபு மல்கு சாரல்
குலைவாழைத் தீங்கனியு மாங்கனியுந்
தேன்பிலிற்றுங் குறும்ப லாவே.

சம்பந்த சுவாமிகள்

ஸ்ரீ சத்திய மூர்த்திக்குக் காந்திஜீ ஆசி

சென்னை நவ 9—

"தாங்கள் மேயராகத் தெரிந்தெடுத்திருப்பது கேட்டுச் சந்தோஷிக்கிறேன். என்னுடைய ஆசீர்வாதத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்"

என்று காந்திஜீயிடமிருந்து சென்னை மேயர் ஸ்ரீமான். எஸ். சத்தியமூர்த்திக்குத் தந்திகிடைத்திருக்கிறது.

யுத்தசமாச்சார வியாக்கியானம்

8-வது பிரசங்கம்

9-11-39 மாலை 6-30 மணியளவிலே
பண்டிதர் ஸ்ரீமான்.மு. நல்லதம்பி அவர்கள் பேசியது
30-10-39 தொடக்கம் 9-11-39 வரையும் நடந்த நிகழ்ச்சிகள்

கிழ்த்திசையிலே போலந்தைப் பாகம்பிரித்தபின்பு ஜேர்மனி தனக்கு மாறுயெழுந்துவரும் பிரித்தானிய பிரான்சிய தேசங்களை எதிர்த்துப் போர்செய்யும்பொருட்டு மேற்றிசை நோக்கலாயிற்று. வீரர் பல்லாயிரவரை மேற்கெல்லைப்புறத்திற்கு விரைந்தனுப்பி நாளும் பல கழிந்தன. எண்ணியவண்ணம் போரியற்ற முடியாதவாறு தோன்றிய இன்னல்களும் பலவாயின. இயற்கையன்னையும் மாறுகொண்டாள் போல் மழைபொழிய ஆற்றுப்பெருக்கால் அரண்களுள் வெள்ளம் புகுந்து சிலபாகங்களைச் சிதைத்தது. எவராலும் அழிக்கமுடியாததிதுவென இறுமாப்புடன் வீரம்பேசிய சிஞ்பிரிட் அரணின் கதி இவ்வாறுதலகண்ட ஹிட்லர் இப்பொழுது ஆற்றையடைந்து அதன்போக்கை வேறுவழியிற் செலுத்த முயல்கின்றார். இம் முயற்சி கைகூட இயற்கையன்னை துணைபுரிவாளோவென்பது ஐயத்திற்கிடனகும். இது ஒருபுறமிருக்க,

இருதிறத்துச்சேனைகளும் ஒருவரையொருவர் எதிர்நோக்கிநிற்கும் இவ்வெல்லைப்புறத்திலே போர்மிகவும் மந்தமாகத்தான் நடக்கிறது. சென்றவாரம் இம்முனையிலிருந்து வெளியாகிய செய்திகளின்படி அங்கே காவல்செய்யும் காவலர் முயற்சியும் மெல்லிய பிரங்கிப்பிரயோகமும் தவிரப் பெரும்பாலும் அமைதியே குடிகொண்டிருந்தது. இவ்வமைதி யாதாயினுமொரு தீவிரமுயற்சிக்கறிகுறியாமோவென எண்ணமிடலானேம். அவ்வாறுமென்பது இவ்வாரங்கிடைத்த செய்திகளால் வெளியாகின்றது. திங்கட்கிழமை இம்முனையில் வானத்திற்புரிந்த கடும்போரொன்றில் 9பிரெஞ்சு விமானங்கள் 27 ஜெர்மனிய விமானங்களைத் தைரியமாகத் தாக்கி அவற்றுள் ஒன்பதை வீழ்த்தித் தமக்கு யாதொரு சேதமுமின்றி வெற்றியோடு மீண்டனவென்றும் பிரெஞ்சு விமானப் போட்டிகளின் தீரச்செயல்கள் பெரிதும் பாராட்டற்பாலனவென்றும் அறிகின்றேம். அடுத்தநாள் வடகடலில் நடந்தபோரில் எதிரியின் விமானங்களைப் பிரிட்டிஷ் விமானங்கள் துரத்திவிட்டன. இவ்விமானப் போர்களிலிருந்து நேசதேச விமானங்கள் உடற்கட்டின் வன்மையிலும் செல்வனம் ஓட்டப்படும் வாய்ப்பிலும் எதிரியின் விமானங்களிலும் பார்க்க மிகவும் மேம்பாடுடையன என்பதும் பிரெஞ்சு விமானங்கள் விமான மோட்டுதலிற் பெருந்திறமை பெற்றிருக்கிறார்களென்பதும் பெறப்படும். முக்கியவாரங்களில் ஸ்கொத்லாந்துக் கரைகளில் நடந்த தாக்கல்களிலும் எதிரியின் பலவீனத்தைக்கண்டோம். "பிறரால் ஜெயிக்கமுடியாத விமானப்படை" என்று எதிரிகள் பெருமைபேசிய விமானங்கள் இத்துணை இலகுவாகச் சேதமடைந்து மாள்கின்றன. முன்னெரு காலத்திலும் இதற்கிணையில்லையென்னும்படி ஆயிரக்கணக்கான விமானங்களையனுப்பி இங்கிலாந்தைத் தாக்கி அதன் வலிமையைக் குறைத்து அதனைக் கலக்கச்செய்து முற்றுயழித்துவிடுவதாக ஹிற்லர் வெருட்டியது பரபரப்புடன் கூறிய அவசரப் பேச்சாகும். அவர் தமது தந்திரங்களை இங்கிலாந்தின் மீது செலுத்துவாரானுல் நடப்பது யாதெனப் பொருள் தொகுப்பு மந்திரி திரு. ஹேபேர்ட்மொறிசன் அவர்கள் அவருக்குச் சந்தேகத்திற்கிடமின்றி இடித்துக் கூறியிருக்கின்றார். இரக்கமின்றிப் பழிக்குப்பழி வாங்கநேரிட்டால் இங்கிலாந்து அவ்விதஞ் செய்யும். ஜெர்மனிமீது பறந்துசென்று துண்டுப்பத்திரங்களை வாரியிறைத்த R. A. F. விமானப்படைகளுக்கு அப்பத்திரங்களைப்போல் வெடிகுண்டுகளை வீசுவதும் இலகுவில் முடியும். இதுவும் ஹிற்லரைத் தயங்கச் செய்கின்றதுபோலும். ஆனுல் அவர் தயங்குவது இதனல் மாத்திரமல்ல வேறுகாரணங்களுமுண்டு. போர்க்கருவிகள் செய்வதற்கவசியம் வேண்டிய எண்ணெயும், இரும்பு, நிக்கல், செம்புமுதலிய உலோகவகைகளும் எதிரிக்கு மிகவுங் குறைவாகும். ஜெர்மனிக்கென ஏற்றிச் செல்லப்பட்ட இவ்வகைப்பொருட்களையெல்லாம் யுத்தகால சட்டத்தின்படி நேசதேசங்கள் பற்றுதல் செய்துவிட்டன. நேசதேசங்களுக்கு இம்மூலப்பொருட்கள் எப்பொழுதும் ஏராளமாக விருக்கின்றன. போர்க்கருவிகளும் தினந்தோறும் அதிகமாகச்செய்து குவிக்கப்பட்டுவருகின்றன. துணைக்காவல் முறையினுல எதிரியின் நீர்மூழ்கிகளினுடைய முயற்சியின் வேகம் தணியத் தொடங்கிவிட்டது. ஹிற்லர் இவைகளால் இன்னும் தயங்கினுல் அதனுலே அவருக்குத் தீமையும் நேசதேசங்களுக்குத்தான் நன்மையும் விளையுமென அவர் நன்குணர்வார். ஆகையினுலேதான் உதவி செய்வாரொருவருமில்லாத அந்த ஹிற்லர் சமாதானப் பேச்சுக்களையும் வெருட்டுதல்களையும் தமக்குதவியாகச் சேர்க்கப் பகீரதப் பிரயத்தனங்களையுஞ் செய்தார். அவையெல்லாம் பயனிலவாயின. எனவே, இனி யாது செய்வாரெனப் பார்ப்போம்.

இனி என்ன?

போரிலே ஹிற்லர் செல்லவேண்டுமானுல் அவர் மின்னல் வேகத்துடன் பாய்ந்து தாக்கவேண்டும். அத்தாக்கலையும் உணவுப்பொருட்களும் மற்றும் பொருட்களும் தடைப்பட்டு ஜேர்மனிமுழுவதும் பஞ்சத்தினுலும் பசிப்பிணியினுலும் வருந்த முன்பு செய்யாவிட்டால் அவர் சரண்புக நேரிடும்; அல்லது திக்கு முக்காடி வருந்த நேரிடும். வேண்டிய தளவாடங்களை உதவுவதற்கு ருஷியா கங்கேரி, ருமேனியா, இத்தாலி முதலிய நாடுகளால் முடியாது. எனவே அவர் செய்யக்கூடியது ஒன்றில் மகினே அரண்களை நொருக்கவேண்டும் அல்லது இத்தாலிக்குள்ளாலேனும் பெல்ஜியம் அல்லது ஒல்லாந்துக்குள்ளாலேனும் நுழைந்து தாக்கல்வேண்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: பிரமாதி ௵ கார்த்திகைமீ ௧௨ வியாழக்கிழமை

பெருமழையும் புயலும் வெள்ளப் பெருக்கும்

இரண்டு மூன்று தினங்களாக இங்கே இடையிடையே மழை பெய்து கொண்டு வரலாயிற்று; சென்ற செவ்வாய்க் கிழமை மாலை நேரந் தொடங்கி மழை அடைத்துப் பெய்யத் தலைப்பட்டது; நேற்றும் அப்படியே விடாமற் பெய்தது; நேற்று பொழுது பட்ட நேரந் தொடக்கமாகப் பெருங் காற்றும் அடிக்கத் தொடங்கியது; இதனால் இப்பொழுது இங்கே நேர்ந்துள்ள அநர்த்தங் கொஞ்சமல்ல; பெருமழை காரணமாக எங்கும் வெள்ளம் பெருக, பள்ளமான நிலத்திற் குடியிருப்போர் குடி யெழும்ப, தெரு வீதிகளில் உள்ள கான்களும் மதகுகளும் பெரும் வெள்ளம் செல்வதற்குப் போதாவாக, வீட்டுக் கொல்லைகளிலெல்லாம் வெள்ளம் மிதந்து இல்லங்களுட் பிரவேசிக்க முயல, இதற்கிடையில் ஊரவர்கள் ஓடி வந்து தெருவீதிகளை வெட்டிப் பிளந்து வெள்ளத்தைப் பாயச் செய்தனர்; அநேக தெரு வீதிகளுக்கு மேலாக ஒரு அடி இரண்டு அடி வெள்ளம் பாய்ந்தோடியது; பெருங் காற்றுண்டாகவே பெருமழையால் நெக்கி யிருந்த நிலத்திலுள்ளனவாகிய மரங்கள் வீடுவாசல்களிலும் கொட்டில்களிலும் ஏனைய கட்டடங்களிலும் தந்தி டெலிவோன் வெளிச்சக் கம்பிகளிலும் தங்கிழுள்ள வேறு மரங்களிலும் வெற்று நிலத்திலும் முறிந்தும்வேரோடு பறிந்தும் வீழலாயின; மோட்டார்பஸ்கள், ரதங்கள், வேறு எவ்வகையான வண்டிகள் எவையும் தெருவீதிகளினூற் செல்லுதல் இயலாதாயின; வழிப்போக்கர்களும் மரங்கள் முறிந்தும் பெயர்ந்தும் தங்கள் தலையில் விழுமோ என்ற அச்சத்தினால் வெளியிற் புறப்பட அஞ்சி ஒதுங்கி யிருந்தனர்; பல மரங்கள் மின்சார விளக்குக் கம்பிகளில் வீழ்ந்து தொங்கியமையினாலும் சிலஇடங்களிற் கம்பிகள் சேதப் பட்டமையினாலும் பட்டின எல்லையுட் சில பாகந் தவிர ஏனைய பாகங்களெல்லாம் தடித்த இருளுடன் காணப்பட்டன. இதுவரையில் இதனால் ஏதும் உயிர்ச்சேதம் கடலிலேனுந் தரையிலேனும் நேர்ந்ததாக எமக்குச் சமாசாரம் கிட்டவில்லை; இப் பெருமழையினாலும் புயலினாலும் இவ்வூரார்க்கு நேர்ந்த சேதமோ மிகவும் அதிகம்; சேதம் எவ்வளவு அதிகமென்பதை இப்பொழுது அறிந்து கொள்ளுதல் முடியாயல் இருக்கிறது.

இவை கிடக்க, இப்படியான அநர்த்தமெல்லாம் இப்பட்டின எல்லையுள் நேர்ந்துவிடவும் இன்னமும் எங்கள் பட்டின சங்கக் கூலியாளராவது அதிகாரிகளாவது வெளியே புறப்பட்டு வந்து கஷ்டப் படுஞ் சனங்களுக்கு ஏதுந் துணை புரியக் காணேம்; இப்பொழுது பெய்த மழையையும் அடித்தகாற்றையும் நேர்ந்த அநர்த்தங்களையும் பட்ட கஷ்டத்தையும் ஒப்பிட்டுச் சொல்லுகில் 1918-ம் ஆண்டில் இப்படி நேர்ந்த பெருமழை புயல் காற்று முதலியவைகளுக்கு ஒப்பிடலாகும்.

பட்டின சங்கத்தார் இப்படியான நேரத்திலே தங்கள் பட்டின பரிபாலனத்திற் கண்ணுங் கருத்துமாக இருத்தல் வேண்டும்; போதிய கூலிக்காரரை மண்வெட்டி கோடரி பிக்கான் முதலிய வேண்டிய ஆயுதங்களுடன் ஆயத்தமாக வைத்திருத்தல்வேண்டும்; எந்த இடத்தில் வெள்ளப் பெருக்கால் ஆபத்து உண்டாகுமோ, மர வீழ்ச்சியினால் அபாயமுண்டாகுமோ, வெள்ளந் தடைப்பட்டு இடர்ப்படுத்துமோ, வேறு அனர்த்தங்கள் நேருமோ அந்த அந்த இடத்தில் கூலியாட்களை உடனுக்குடன் அனுப்பி வைத்தல் வேண்டும்; சுகாதாரப் பரிசோதகர்கள் ஆங்காங்கு விரைந்து சென்று சென்று பார்க்கவேண்டும்; பட்டினவாசிகள் தம் கருமத்தைத் தாமே பார்த்தற்கு முற்பட்டு நிற்கும் இக்காலத்திற் பட்டின பரிபாலன சங்கத்தார் இந்த விதமாகத் துணை புரியத் தொடங்குவார்களானால் இரு பகுதியார்க்கும் அதிக சிரமம் நேராதல்லவா? பட்டின சங்கத்தார் மாத்திரமல்லர் பொலிசதிகாரிகள் தலைமைக்காரர் என்னுமிவர்களும் இப்படியான ஆபத்துக் காலங்களில் உற்றவிடத்து உதவிசெய்ய முற்பட்டு நிற்றல் ஆவசியகம். இவ்விதமான மழை காற்றுப் பெரு வெள்ளம்முதலியவைகள் நேருங் காலத்திலே கிராமவாசிகளுக்கு, அக்கிராமவாசிகளுடன் சேர்ந்து கிராம சங்கங்களின் அதிகாரிகள் பெரும் உதவி செய்கிறார்களென விசாரணையில் அறியலானேம்; அவர்களைப் பின்பற்றிப் பட்டினசங்கத்தார் நடக்க முயலுதல் வேண்டும்.

இனி இப் பட்டினத்திலுள்ள கான்கள் மதகுகள் என்னும் இவைகளை அவதானித்துப் பார்த்தால், யாழ்ப்பாணத்தில் அற்ப மழையே யொழிய ஒரு போதும் அதிக மழை பெய்ய மாட்டா தென்ற எண்ணத்துடன் அலட்சியமாக விடப்பட்டனபோற் காணப்படுகின்றன. சிலகான்கள் வெள்ளம் பாய வேண்டிய பக்கத்திற்கு எதிர்ப் பக்கமாகப் பாயக்கூடிய நிலையிற் காணப்படுகின்றன; சில மதகுகள் அற்ப மழையால் வரும் தண்ணீரையன்றி அதிகமழையால் வரும் வெள்ளத்தைத் தமக்கூடாகப் பாய விட்டுக் கொள்ள முடியாத நிலைமையிற் கிடக்கக் காணப்படுகின்றன. வண் மேற்கிலே சிவலிங்கப் புளியடியி லிருந்து ஓட்டு மடத்தடிக்குச செல்லும் ஒரு குறுக்குத் தெருவுண்டு; இந்தக் குறுக்குத் தெருவின் மத்தியில் ஐயனார் கோவிலடி முதலிய இடங்களுக்குப்போதற்காகிய ஒரு பெரிய ஒழுங்கையுண்டு; அந்த ஒழுங்கையும் இந்தக் குறுக்குத் தெருவும் சந்திக்கு மிடத்தில் கான் இருப்பதால், வண்டி முதலியன போக்கு வரவு செய்வதற்காகக் கானில் ஒரு மதகு அமைக்கப்பட்டிருக்கிறது; குறித்த மதகின் துவாரம் மிகவுஞ் சிறியது; அந்த மதகினூற் பாய வேண்டிய வெள்ளம், வண்கிழக்கி லிருந்து யாழ்ப்பாணம் காங்கேயன் துறைத் தெருவிலுள்ள கண் பெருத்த மதகு வாயிலாக முந்திச் சொல்லப்பட்ட கானுக்கு வந்து, அந்த அயலிலுள்ள வெள்ளமும் ஒழுங்கையிலுள்ள வெள்ளமும் சேர, ஒருங்கு பெருகிப் பாய்வதுண்டு; இப்படி எந்தப் பகுதியிலிருந்து எவ்வளவு வெள்ளம் வந்தாலும் 'கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி' என்றபிரகாரம், இந்த ஒற்றைச் சிறு கண்மதகு வாயிலாகவே பாய வேண்டியிருக்கின்றது; இதனால் வரக்கூடிய அநர்த்தமென்ன? வெள்ள விரைவிற் பாய்ந்து வடிய முடியாமையால் அந்த மதகிற்கு அயலிலுள்ள வீட்டுக் கொல்லைகளிலெல்லாம் வெள்ளம் பரந்து நிறைந்து வீடுகளுள்ளும் பிரவேசிப்பதாகக் குடியிருப்போரை அச்சுறுத்துவ துண்டு; இந்த மதகுக் கண்ணைப் பற்றிப் பலமுறை இப்பத்திரிகை வாயிலாக முறைப்பட்டபோதும் அதிகாரிகள் இதனையிட்டுச் சிந்திக் கின்றிலர். இதனை எவரும் நேரில் வந்து பார்க்கலாம். இன்னுமிப்படியான வசதியீனங்கள் பல பெருமழைவெள்ளப்பெருக்குக்கள் ஏற்படுங் காலங்களில் இங்குள்ள சனங்களுக்கு நேர்வது சகசமாய் விட்டது. ஆனற் பட்டினப் பிதாக்கள் இவைகளை யிட்டுச் சிந்திப்பார்களா?

இலங்கையர் விரும்பாத வேலைகள்

கொழும்பு நகரசபை செய்த பரிசீலனையின் முடிவு

கொழும்பு முனிசிப்பாலிற்றியில் வேலை செய்யும் இலங்கையல்லாத தொழிலாளருக்குப் பதில் எதிர்காலத்தில் ஏற்படும் காலிஸ்தானங்களுக்கு இலங்கையர்களையே வேலைக்கு அமர்த்தும் கொள்கையை ஒட்டி நகரசபையின் கவனத்துக்கு உத்தியோகரீதியான அறிக்கைகள் நகரசபைக் குட்பட்ட இலாகாக்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.

நகரசபையினின் வேலைகளிற் சிலவற்றில் இலங்கையர் பயிற்சி பெறும் வரை, இன்னும் அநேக வருஷங்களுக்கு இலங்கையரல்லாதாரையே அமர்த்தியாகவேண்டியிருக்கிறதென்று அவ்வறிக்கைகள் பலமாக வற்புறுத்துகின்றன.

இப்போது இலங்கையரல்லாதார் செய்து வரும் வேலைகளை இலங்கையர் எவ்வளவு தூரம் திருப்திகரமாய்ச் செய்யக்கூடுமென்ற விஷயம் சமீபத்தில எஞ்ஜினியர் இலாகாவிற் பரிட்சிக்கப்பட்டது. அதன் முடிவுகள் மிக்க ருசிகரமானவை.

அவற்றின் விபரம் வருமாறு:—

மலகூடங்கள் தெருக்கள் சுத்தஞ் செய்வதற்காக 60 இலங்கையர் அமர்த்தப்பட்டனர். அவர்களிற் பெரும்பான்மையோர் அண்டையில் தங்களுக்கு அறிமுகமானவர்களோ அல்லது உறவினர்களோ வருவதைக் கண்டால் வேலை செய்வதை நிறுத்திவிட்டுச் சும்மா நிற்கிறார்கள். அத்தோழர்கள் மறைந்த பின்புதான்மீளவும் அவர்கள் வேலைசெய்ய ஆரம்பிக்கின்றனர்.

குப்பை லொறிகளிற் சென்றால் அநேகமாக லொறியின் உட்புறத்திலே யிருக்க அவர்கள் விரும்புகிறார்கள்.

தெருக்கூட்டும் வேலை அதிகாலை 5-30 மணிக்கு ஆரம்பமாகின்றது. இலங்கையர்களோ இந்நேரத்திற்கு வேலைக்குவரத் தயங்குகின்றார்கள். சுகாதாரப் பிரிவைச்சேர்ந்த தொழிலாளிகள் வருஷத்தின் 365 நாட்களிலும் வேலைசெய்ய வேண்டியவர்கள். ஆயின், இலங்கையரோ திருநாட்களிலும் திருவிழா நாட்களிலும்வழக்கம்போல் வேலைக்கு வரமாட்டார்கள்

குறித்த அறிக்கைகளில் ஒன்று மேலும் கூறுவதாவது:—

"இலங்கையர்கள் தெருச்சுத்தஞ் செய்யும் வேலைகளைச் செய்ய இப்பொழுது ஓரளவு முன்வரலாம். ஆயின், சுபீட்சகாலத்தில்இதைவிட நல்லவேலை கிடைக்குமாயின், அவர்கள் நாளடைவில் இவ்வேலையைவிட்டு விலகிவிடக் கூடும்."

இந்த அறிக்கைகளின் கருத்தைச் சுருங்கக்கூறின், இலங்கையர்கள் ஒரு சில வேலைகளைத் தங்கள் அந்தஸ்துக்குக் கேவலமானதென்று கருதி வருவதால், இந்த எண்ணம் படிப்படியாக நிவிர்த்திக்கப்படுவதற்கு அவர்கள் பயிற்சியளிக்கப்படவேண்டும் என்பதேயாகும். இந்த லக்ஷியத்தை அடைவதற்கு நகரசபை தனது எதிர்காலக் கொள்கையை முடிவாக அங்கீகரித்தபின், ஒரு திட்டத்தைத்தயாரிக்க உத்தேசித்திருக்கிறது.

பெரியவிளான் கத்திக் குத்து வழக்கு

டக்றரின் சாக்ஷியம்

விசாரணை இன்றுந் தொடர்ந்து நடைபெறுகிறது

15-11-39

பெரியவிளானைச் சேர்ந்த (1) கசிமீரு-சூசை, (2) சின்னத்தம்பி-சின்னத்துரை, மாரியங்கூடலைச் சேர்ந்த (3) கதிரேசு-விரசிங்கம் ஆகியவர்களுள் முதலாம் எதிரி அவ்வூர் செல்லையா-கனகரத்தினம் என்பவரை ஒரு கொடுவாக்கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாயும் இரண்டாம்மூன்றும் எதிரிகள் இச்செய்கைக்கு முதலாம் எதிரிக்கு உதவிசெய்ததாயும் குற்றஞ் சாட்டிய வழக்குச் சுப்பிறீம் கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்தது.

முதலாம்எதிரிக்காகத் திரு. S. D. தம்பு திரு. கன்னுத்துரையின் உதவியைக்கொண்டும் இரண்டாம் மூன்றும் எதிரிகட்காகத் திரு. F. X. பிலிப்ஸ் திரு. இராசரத்தினத்தின் உதவியைக் கொண்டும் வாதித்தனர்.

யூரித்தலைவராகத் திரு.C.E. சாமுவேல் தெரிந்தெடுக்கப்பட்டார்.

முதலாவதாக, டாக்குத்தர் திரு.C குருசாமி சாக்ஷியம் கூறுகையில் இறந்தவன்மீது பதின்மூன்று கத்திக் காயங்கள் காணப்பட்டதாயும் அவற்றுட் சில சீவனுக்கு மோசமானவையென்றும் கூறினர். இவற்றைவிட வேறு ஆறு காயங்களும் காணப்பட்டதாகவும் கூறினர். இக் காயங்கள் அடிக்காயங்களென்றும் இழுபறிப்பட்டபோது உண்டான உரோஞ்சுக்காயங்களென்றும் கூறினர். அல்லாமலும், இறந்தவன் 24 வயதுடையவனென்றும் திடமான தேகக்கட்டுடையவனென்றும் கூறினர்.

இரண்டாவதாகச் சித்தங்கேணியில் வசிப்பவரும் கார் டிறைவருமாகிய சின்னப்பு - பொன்னுத்துரை கூறியவற்றின் சாராம்சமாவது:-

இறந்தவன் என்னுடைய மச்சான். இவ்வெதிரிகள் எல்லோரையும் எனக்குத்தெரியும். முதலாம் எதிரி பள்ள வகுப்பைச் சேர்ந்தவன்; இரண்டாம் மூன்றும் எதிரிகள் வெள்ளாள வகுப்பைச்சேர்ந்தவர்கள்; இறந்தவனுக்கும் எதிரிகட்கும் கோபதாபமிருந்ததைப் பற்றி எனக்குத் தெரியாது. பெட்டிசம் ஒன்று அனுப்பப்பட்டதைப் பற்றியும் எனக்குத் தெரியாது. இச் சம்பவத்தன்று நாகலிங்கத்தின் மனைவியார் இறந்தமையால் மரணவீட்டிற்கு நான் சென்றிருந்தேன்; இங்கே இருக்கும் எதிரிகளும் அங்கு வந்து நாகலிங்கத்தின் வீட்டுப்படலையடியில் நின்றனர்; இப்படலைக்குப் பக்கத்தேயுள்ள சந்தியில 2ம் 3ம் எதிரிகள் கூடி நின்று கதைத்துக்கொண்டு நின்றனர்; அப்போது முதலாம் எதிரி அவர்களுக்குச் சிறிது தூரத்தில் நின்றார்; முதலாம் எதிரி அந்தச் சமயத்தில் கையில் ஒரு கொடுவாக்கத்தியை வைத்திருந்தார். 2ம் 3ம் எதிரிகள் கையில் ஒன்றும் வைத்திருக்கவில்லை; பின்னர் இரண்டாம் எதிரி மூன்றும் எதிரியை ஏதோ இரகசியம் சொல்லப்போவதாகக் கூப்பிட்டார். இதற்குப்பின் முதலாம் எதிரி என்னசெய்தார் என்று எனக்குத் தெரியாது; சிறிது நேரத்தில் "ஐயோ ஐயோ"வென்று கதறிச் சத்தம் கேட்டது. நான் அவ்விடத்தை நோக்கி ஓடினேன்; எனக்குப்பின்னால் வேறு பேரும் ஓடிவந்தனர்; நான் அங்கு ஓடியபோது இறந்தவன் முகக்குப்புறக்கிடந்தான்; மூன்றும்எதிரி அவனை அமர்த்திப்பிடித்திருந்தார்; முதலாம் எதிரி ஒரு கொடுவாக்கத்தியாலும் இரண்டாம் எதிரி ஒரு சோப்பிக்கத்தியாலுமாக வெட்டினர்; இரண்டாம் மூன்றும்எதிரிகள் என்னைக்கண்டதும் அவ்வளவில் விட்டுப்போட்டோடினர்; முதலாம் எதிரி அங்கேதானே நின்று வெட்டிக்கொண்டு நின்றார்; அவர் என்னைக் காணவில்லை; நான் பக்கத்தில் கிடந்த ஒரு கல்லை எடுத்து முதலாம்எதிரிக்கு எறிந்தேன்; முதலாம் எதிரி "யாரடா எனக்கு எறிந்தது" என்று கேட்டுக்கொண்டு ஓடிவந்து என்னைத் துரத்தினர். நான் நாகலிங்கம் வளவுக்குள் ஓடினேன்; முதலாம் எதிரி என்னைக் கலைத்துக்கொண்டு வந்த வழியாலே வடக்குப்பக்கமாக ஓடினர்; நான் திரும்ப அவ்விடத்திற்குச்சென்றேன். காயக்காரன் ஆஸ்பத்திரிக்கு ஒருகாரில் எடுத்துச்செல்லப்பட்டான்; நானும் காயக்காரனோடு ஆஸ்பத்திரிக்குச் சென்றேன்; நான் பொலிசாருக்கு வாய்முறைப்பாடு அன்றே கூறினேன்; "ஐயோ,ஐயோ" என்ற சத்தம் எனக்குக் கேட்குமுன்னர் இறந்தவன் மரணவீட்டில்யாரோ ஒருவரோடு கதைத்துக்கொண்டு நின்றதை நான் கண்டேன்; அவர் பின்னர் மலசலம் கழிக்கப் போனதைப் பற்றி எனக்குத் தெரியாது. விசாரணை நடைபெறுகிறது. ந. கி.

கோண்டாவிற் கத்திக்குத்து வழக்கு

14-11-39

கோண்டாவிலில வசிக்கும் செல்லப்பா-செல்வரத்தினம் என்பவருக்கு அவ்வூர் செல்லையா இரத்தினம் என்பவர் ஓர் கத்தியாற் குத்தித் தோள்மூட்டிற் காயம் வருவித்ததாய்க் குற்றஞ்சாட்டிய வழக்கு யாழ்ப்பாணம் நீதிபதி திரு. E. V. R. சமரவிக்கிரம முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது காயக்காரன செல்லப்பா செல்வரத்தினம் கூறியதாவது:-

சென்ற 12-ம் திகதி காலை 8—30 மணி வரையில நான் கோண்டாவிலிலுள்ள வல்லிபுரம் சோமசுந்தரத்தின் கடை வாசலில் நின்றபோது இவ்வெதிரியாகிய செல்லையா இரத்தினம் அங்கு வந்து சோமசுந்தரம் எங்கே என்று கேட்டபோது அவர் தேனீர் குடிக்கப்போய்விட்டாரென்று கூறினேன். அவர் தனது குடைக்குள் வைத்திருந்த ஓர் சதகத்தை எடுத்து எனது வலது தோள்மூட்டில் வெட்டினார். நான் கத்தியைப பிடித்தேன். அவர் கத்தியை இழுத்தார். அப்போது எனது மூன்று கைவிரல்களிலும் காயம் ஏற்பட்டது நான் அறிவு மயங்கி நிலத்தில் விழுந்துவிட்டேன். பின்னர் விதானையார் அங்கு வந்தார். விதானையார் என்னைப் பொலிஸ்நிலயம் கூட்டிச் சென்றார். நான் இவ்வெதிரிக்குக் கத்தியாற் குத்தினதாக ஒரு வழக்கை இவ்வெதிரி வைத்திருக்கிறார். அவ்வழக்கு விசாரணையில இருக்கிறது. நான் கத்தியால் குத்தினதாய் எதிரி என்மீது வழக்கு வைத்திருந்தமையால்தான் இப்போது அவர் எனக்குக் குத்தினார். இதைவிட வேறு ஒருவகையான கோபதாபமும் எங்களுக்குளில்லை. நீதிபதி சாக்ஷிக்காரனைப் பார்த்து நீ கோபிக்கவேண்டிய இடத்தில் எதிரி ஏன் கோபங்கொள்ளவேண்டியதாயிற்று என்று கூறினர். இதன் பின்னர் வேறு சாக்ஷியையும் விசாரணை செய்தபின்னர் நீதிபதி எதிரியை 150 ரூபாப் பிணையில் விட்டு வழக்கை மேல விசாரணைக்கு வருகிற 5-12-39-ந் திகதிக்குத் தவணையிட்டார்.

ந-கி

—0—

பத்தாயிரம் தபாற் பைகள்

பிரிட்டனிலிருந்தும் மற்றும் மேற்கு நாடுகளிலிருந்தும் கடல் மார்க்கமாக ஏறக்குறைய 10,000 தபாற் பைகள் ஞாயிற்றுக்கிழமையன்று கொழும்புக்கு வந்து சேர்ந்தன இவற்றைக் கப்பலிலிருந்து கரைக்குக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு 20 படகுகளும் 100 பேரும் திங்கட்கிழமைகாலைவரை வேலை செய்தனர். இவற்றில் 300-பைகள் தான் இலங்கைக்குரியவை. மற்றவற்றில் 7000 பைகள் மீண்டும் மற்றநாடுகளுக்குக் கப்பலில் அனுப்பிவைக்கப் பட்டன. இலங்கைத் தபால்கள் திங்கட்கிழமை காலையில் கொடுக்கப்பட்டன. ஞாயிற்றுக்கிழமை தபால் பைகள் இறக்குமதியானதுபோல் ஏராளமான தபால்கள் இதுவரை இங்கு இதற்குமுன் இறக்குமதியானதில்லை.

காரைநகர்
சுப்பிரமணிய வித்தியாசாலையின்
(ஐம்பதாமாண்டு நிறைவுப்)
பொன்விழா அறிக்கை

கனம்தங்கிய தலைவர் அவர்களே!
மகாசபையோர்களே!!

இந்த வித்தியாசாலையின் ஐம்பதாம் ஆண்டு நிறைவு (பொன்விழா) அறிக்கையொன்று கூற முன்வந்த யான், வரலாறு முற்றுங் கண்டுணர்ந்தவனல்லன், எனக்கும் அதே வயது. என்பணியோ இருபதிற் றிரண்டாண்டினது. ஆகையால் சாதனங்களாலும் பிறவாற்றாலும் அறிந்தவைகளையும் சோறுபவத்தையும் கொண்டு ஒருவாறு உரைக்க முன்வந்தனன். குற்றங்களைந்து குணநாடிக்கொள்ளும்படி வேண்டுகின்றேன்.

உலகினில் உயர்ந்தது ஒழுக்கமென்பது ஒரு தலையாகும். அந்த ஒழுக்கம் வாயிலாக மக்களை வாழ்க்கை முறையிற் சிறப்புறச் செய்யும் மார்க்கங்களுள்ளே தலையாயது நமது சைவசமயம். அதுவோ அநாதியானது. "சிவனெனு நாமந் தனக்கேயுடைய" சிவபெருமானைத் தலைவனாகக் கொண்டது. இச் சைவசமயத்தோடு முரணாம் புறச்சமயங்களுள்ளே மிகவும்பிற் காலத்திற்றோன்றியவற்று ளொன்று கிறிஸ்த சமயம். அது மேலைத்தேச அரசுடனே நமது நாட்டிலும்புகுந்தது. அதனைப் பரப்புமாறு முயன்றபாதிரிமார் பாடசாலை முதலியவைகளை ஆங்காங்கு தாபித்து நடாத்திக் கல்விமூலமாகவும், பிரசார மூலமாகவும் பாமரசனங்களை அனுப்பித் தம் வசப்படுத்தவோராயினர். அவ்வாற்றானே கேடடைந்தோர் பலர். இதனை:-

"நல்லவழி காட்டுவோ முடுபுடவை சம்ப
ளம் நாளுநாளுந் தருகுவோ
நாஞ் சொல்வதைக் கேளுமென மருட்டிச்
சேர்த்து ஞானமுஞ் செய்துவிட்டார்
மெல்ல மெல்லப் பின்னை வேலையிங்கில்லை
நீர் வீட்டினிடை போமென்கிறார்
வேண்டியொரு கன்னியைக் கைக்கொண்
டு கருவாக்கிவிட்டபின் கணவன்வேலை
இல்லை நீ போவென்று தள்ளுவது போ
லுமே இனியெம்மை யெம்முறவினோர்
எட்டியும் பாரார்கள் கிட்டவும் வாரார்கள்
ஊர்ப்பூட்டியழவு மறியோம்
நல்லவா மிம்மைக்கு மறுமைக்கு நரகினுக்
காளாகி மிக வழிந்தோம்
ஆபரா பரனே கிறிஸ்தவர்க ளெங்களை
அடுத்துக்கெடுத்தார்களே."

என்றவாறு கழிவிரக்கமுற்றோர் கூற்றுக் கூறும் அக்காலத்துப் பாடல்கள் புலப்படுத்துகின்றன. இன்னுமவர்கள் செய்த அநீதிகளோ பலப்பலவாகும்.

இவ்வாறு யாழ்ப்பாணநாட்டிலே நமது சமயநிலை கேடுறும்பொழுது பரசமய கோளரியாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் தோன்றினர்கள். அவர்கள் பாதிரிகள் செயலைக் கண்டித்தும், சமயப் பிரசங்கங்கள் செய்தும், சைவப் பாடசாலைகளைத் தாபித்தும், கல்வி கற்பித்தும், நன்னூற் பிரசுரங்கள் செய்தும் சைவ சமயத்தை நிலைநாட்டினர்கள். அதனால் அன்றும் இன்றும் நமது சைவசமயிகள் பேரிடர் களைபவராயினர். அத்தகைய நாவலரவர்கள் செயலைப் பின்பற்றியே அவர் காலத்திலும் பின்னும் ஊர்கடோறும் சைவப் பாடசாலைகள் தோற்றுவனவாயின.

அங்ஙனமே இற்றைக் கைம்பது யாண்டுகளின் முன்னே இக்காரைநகரிலேயும், பாதிரி சமயத்தவர்கள் செய்யும் பசுத்தோல் போர்த்த புலியின் செயலையொத்த செயல்களைக்கண்டு உண்மையையுணர்ந்து வருந்திய சைவப் பெரியார்களது செயற்கருஞ் சிவபுண்ணியச் செயற்களுளகவும், அவர்தம் மெய்யறிவு, ஊக்கம் அபிமானம் முதலியவற்றின் குறியீடாகவும் இவ்விதாலயம், சென்றவிரோதிவருடம் ஆடிமாசம் 23ந் தேதி (1889) காரை மருதடி விநாயகராலயத்தயலிலே அங்குரித்த சுப்பிரமணிய வித்தியாசாலையென நாமகரணம் பெற்று விளங்கியது.

அக்கால் நமது காரைநகரில் விளங்கிய பாரிய தனவந்தரும், வேளாண் குலதிலகரும், உதார புருஷரும், சைவத் திருவாளரும், ஆகிய ஸ்ரீமான் சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியபிள்ளை என்பவரே இவ்விதாலய தாபகராவர். "நிலவரை நீள்புகழாற்றிற் புலவரைப் போற்றாது புத்தேளுலகு" என்றும் இந்நிலவுலகு நிற்கும்வரையும் நீள்புகழ் நிறுவிய அப்பெருந் தகையாளர் செயல் மறக்கற்பாலதன்று. அவர்பெயர் என்றும் நிலைநிற்கும்.

இங்ஙனந் தோன்றிய சுப்பிரமணிய வித்தியாசாலையிலே முதல்ஆசிரியராக நியமனம் பெற்றவர், யாழ்ப்பாணத்தில் இக்காலத்தில் சைவாசிரியர்கள் பலர் மிளிரும்படி தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்துழைத்தவராகிய காரை, ச. அருணாசலஉபாத்தியாயர் அவர்களேயாவர். அதனால் கலாமுகம் காணுங் கப்பல் துறைமுகம் காட்டு மாலுமி பெற்றாங்கு அவர் கற்பித்தகாலத்திலும் அல்லாதகாலத்திலும் சைவத்தையும் தமிழ்க்கல்வியையும் பரிபாலிக்குமுகமுண்டாவதாயிற்று. அவர்தஞ் செயலும் போற்றப்படுவதேயாம்.

இவ்விதாலயத்தின் முதல் ஆண்டு பூர்த்தியளவிலே இவ்வூரவரும் இயற்றமிழ்ப் போதகாசிரியருமாகிய வித்வான் ச. நாகமுத்துப்பிள்ளை அவர்கள் ஆசிரியராக நியமனம் பெற்றனர். அவர் தலைமை ஆசிரியராயும் (அரசினர் தராதரபத்திரம்அற்றவராதலின்) உதவியாசிரியராயும் 35 வருடங்களுக்குமேல் எத்தகைய வேதன நிலையிலும் தளராது நிலைத்திருந்து தமிழ்க்கல்வி விருத்தியையும் பாடசாலையபிவிருத்தியையும் நாடியுழைத்து வறுமையிற் செம்மையாக வாழ்ந்து உபகாரவேதனம் பெற்றுப் பூரணாயுளுடன் விளங்கிச் சமீபகாலத்திற் கதியடைந்தனர். அவர் இப் பொன்விழாக் காட்சி பெறாமை வருந்தத்தக்கது.

இப்பாடசாலை, நிலம், பழைய கட்டிடம், உபகரணங்கள், உபாத்தியாயர் வேதனம் முதலியனவெல்லாம் உவந்து இந்த சுப்பிரமணியபிள்ளையின் செயலால் வளர்வதாயிற்று. வித்தியாரம்ப வயதாகிய ஐந்தாம் பிராயமுதல் நல்லூர் ஸ்ரீமத் ச. கைலாசபிள்ளை அவர்கள் தலைமையில் சைவக்கல்விப் பரீக்ஷையும் ஆண்டுவிழாக்களும் பிரசங்கங்களும் கண்டு விளங்கியது.

ஸ்தாபகர் சி.சுப்பிரமணிய பிள்ளையுடன் அபிமானிகளாக உதவினோருள் எடுத்துச் சொல்லப்படத்தக்கவர்கள் ச. அருணாசல உபாத்தியாயர், கா. வேதக்குட்டி ஐயர், கா. சிவசிதம்பரையர், சி. சங்கரப்பிள்ளை, ச. கணபதிப்பிள்ளை, ஆ. அம்பலவாணர், மு. குமாரவேலுப்பிள்ளை என்பவர்கள். இவர்கள் மூலமாகக் கிடைத்த ரூபா 250ம் ஸ்தாபகர் உதவியது ரூபா 400ம் ஆக ரூபா 650 மூலநிதியாக அதன் வட்டி மாத்திரம் எடுத்து விநியோகஞ் செய்யப்படுமாறும் தெரிவுறும் நியாசதாரிகளால் நடாத்தப்படுமாறும் நியாசதாரிகள் நியமிக்கும் மனேஜரதிகாரம் பெறுமாறும், சைவமும் உயர்தரக்கல்வியும், சிறப்புறவேண்டியன செய்யுமாறுமான சாதனங்கள் செய்யப்பட்டன. இவ்வாற்றானே முதன் முதல் நியமனம் பெற்ற நியாசதாரிகள் சி. சுப்பிரமணியபிள்ளை, கா. சிவசிதம்பரையர், ச. அருணாசலம் என்பவராவர். இவர்கள் பாடசாலையை நடாத்தியவாறு விஜய௵ பங்குனி௴ 27ந்திகதி அவர்கள் வெளியிட்ட ஆவேதனமூலம் அறியக்கிடக்கின்றது. பின்வந்தோரின் வெளியீடொன்றும் கிடைக்கவில்லை. ஆயினும் யாவரும் பாடசாலையபிவிருத்தியை நாடிப் பணிசெய்தனரென்பது மிகையாகாது.

பன்னிரண்டாம் பிராயம் வரையும் உபாத்தியாயர் வேதன முதலிய யாவற்றையும் தாமே கொடுத்து நடாத்திய வள்ளல் ஸ்ரீமான் சுப்பிரமணியபிள்ளை இவ்விதாலயத்தைத் தாம் செய்துவைத்த கட்டுப்பாடுகளுக் கமைந்தொழுகும் காரைநகர்ச் சைவாபிமானிகளின் பொது ஸ்தாபனமாகக் கருதுமாறு செய்துவைத்த கைம்மாறு கருதாத பெருந்தன்மை என்றும் யாவராலும் பாராட்டப்படுவதொன்றாகும்.

இங்ஙனம் பாலப்பிராயம் 12ம் நிறைந்த விதாலயம் 1900ம் ஆண்டளவில் மானிப்பாய் வாசியும் சைவப் பாடசாலைகளின் மனேஜருமாய் விளங்கிய ஸ்ரீமாந் S. K. சங்கரத்தினம் அவர்கள் மனேஜராகவும், காரைநகர் மேற்கு பயிற்றப்பட்ட தராதரம் பெற்ற ஆசிரியர் சி. தில்லையம்பலம் அவர்கள் தலைமைஆசிரியராகவும் நியமனம் பெற அரசினர் உதவும் நன்கொடைப் பணம் பெற்று வளர்வதாய் Vம் வகுப்பு வரையும் கற்பிக்கப்படும் பிரதம ஆண் பாடசாலையாக நடைபெறத்தொடங்கியது. இதனாலும் கருத்து வேறுபாட்டாலும் அபிமானிகள் உதவி சிறிது குறைவுற அரசினர் பாட மாத்திரம் கற்பிக்கப்படுவதாய் ஒருவாறு சிலகாலம் நடைபெற்றுவந்தது.

இத்தகைய கஷ்டத்தோடுகூடிய யௌவனப் பிராயகாலமாகிய 1920ம் ஆண்டளவிலே, சித்தங்கேணி நொத்தாரிஸ் ச. அருணாசலமவர்கள் மனேஜராகவும் ஸ்ரீ கா. வேதக்குட்டிஐயர், ச. காசிநாதர், சி. ச. கந்தப்பு (தற்கால மனேஜர்) நியாசதாரிகளாகவும் அமைந்தனர். 1917ல் தற்காலத் தலைமை ஆசிரியர் நியமனமுமானது. இவ்வாறு குழுமினோர் பாடசாலையை நன்னிலைப்படுத்துமாறும் உயர்தர வகுப்புக்களை நடத்துமாறும் முயன்றபோது அப்போது மலாய்நாட்டில் சிறந்த உத்தியோகத்திலிருந்தவரும், பரோபகாரியுமாகிய காரைநகர் ஸ்ரீமான் ச. சுப்பிரமணியம் அவர்கள் தாமும் முயன்று உதவிபுரிவதாக முன்வந்து பொருள் சேர்த்துதவ இப்போதுள்ள பெரிய கற்கட்டிடம் நிறைவேறப்பெறுவதாயிற்று. ஆகவே ஆண் பெண் பிள்ளைகள் கற்கும் கலவன் பாடசாலையாகவும் VIம் வகுப்பு முதலான மேல்வகுப்புக ளமைந்ததாகவும் பாடசாலை வளர்ச்சியுறத் தொடங்கியது. மேற்கூறிய ஸ்ரீமாந் சுப்பிரமணியம் அவர்களே 1923ல்மனேஜருமானார்கள் 200வரையின பிள்ளைகளுள்ளதும், ஏழெட்டாசிரியர்கள் கற்பிப்பதுமாகச் சிறந்தது. மாணவர் கலாவிருத்திச் சங்கக் கூட்டங்கள் வருடாந்த விழாக்கள் முதலியன எல்லாம் நடைபெறத்தொடங்கின.

காரைநகர் மேற்கு ஸ்ரீமாந் க. செல்லப்பாபிள்ளை அவர்கள் 3 வருடமும் காரைநகர் கிழக்கு, கிராமச்சங்கத்தலைவர் ஸ்ரீமாந் ச. கணபதிப்பிள்ளை அவர்கள் 2 வருடமுமாக 1929ன் மேல் இப்பாடசாலை மனேஜர்களாக நியமனம் பெற்றுப் பாடசாலை வளர்ச்சிக்குரிய பணிகள் பலவுஞ் செய்து சிறப்புற நடத்தினர்கள். இவ்வாறான நிகழ்வுகளமைந்த 1920ம் ஆண்டின் மேல் நிகழ்வுற்ற 16 வருடங்களும் இப் பாடசாலையின் வியாழதசை போன்று கல்வி, கட்டிடம், சுற்றாடல் முதலியனவெல்லாம் சிறப்புற நிகழ்வதாயிற்று. இதனால் உயர்தர வகுப்புகள் கற்கவேண்டுமானால் தெல்லிப்பழைக்குப் போகவேண்டுமென்று கிறிஸ்தவர்கள் காரைநகர் மக்களிடம் நிறுத்திவைத்த எண்ணம் நிலை மாறியது. இங்குள்ள மற்றும் சைவப்பாடசாலைகளும் உயர்ந்து நடைபெறத் தொடங்கின. முடியாதென்ற நம்மூர் மிஷன் பாடசாலைகளிலும் உயர்தரவகுப்புக் கல்வி முதலியன நடைபெறலாயிற்று.

1935ம் ஆண்டு தொடக்கமாகத் தற்காலம் மனேஜராக விளங்குபவரும், ஸ்தாபகர் புதல்வரும், நியாசதாரிகளுள் ஒருவரும் ஆகிய ஸ்ரீமான் சி. சு. கந்தப்பு அவர்கள் மனேஜராக நியமனம்பெற்று விளங்குகின்றனர். இவர் நியாசதாரியாக நியமனம் பெற்ற காலம் தொடக்கமாகவே இப்பாடசாலையின் அபிவிருத்தியில் நோக்கமுடையராய் மற்றையோர் புரிந்த பணிகளுக்கெல்லாம் வேண்டிய 'உதவிபுரிந்து வந்தனர்' மனேஜராயதன்மேல் இப்பாடசாலை முன்னேற்றங்கருதிச் செய்தவை பாராட்டப்படத்தக்கவை. கிழக்குப் பாகத்தில் காணப்படும் புதிய கட்டிடம், முகப்புக்கட்டிடம், கதவு, மதிற்சுவர், வெளிக்கிணறு, தோட்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

‘ஏழைகளே நாட்டின் பொக்கிஷம்’

சமூக சேவையின் சிறந்த லட்சணம்

ஸேர். வை. துரைசுவாமி அவர்களின் சொற்பொழிவு

நீர்கொழும்பு நவ 13

நீர்கொழும்பு சமூகசேவா சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் சனிக்கிழமையன்று சங்கத்தலைவர் திரு. டி. வீரரத்ன தலைமையில்நடைபெற்றது. அப்பொழுது அரசாங்கசபைத் தலைவர் ஸேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி பேசுகையிற் குறிப்பிட்டதாவது:-

"எந்தநாட்டுக்கும் ஏழைகளே அந்நாட்டின் பொக்கிஷமாவார்கள். மக்கள் தரும கைங்கரியத்தில் ஈடுபடுவதால் அவர்கள் பிரதானமாகத் தங்களுக்கே உதவி செய்துகொள்கின்றனர். தங்கள் ஆதரவை எதிர்பார்த்திருப்போருக்குத் தாராளமானமனத்தோடு சேவை செய்வதனால் ஜனங்கள் தங்களுக்கே உதவி செய்துகொண்டவர்களாவார்கள். சமூக சேவையில் ஈடுபட்டிருப்பவர்கள் தங்களுக்கு அரும் பெரும் பலன் தரக்கூடிய பாக்கியம் கிடைத்துள்ளதே என்ற மனப்பான்மையிற் சேவை செய்யவேண்டும்."

பிறகு ஸ்தல ஸ்தாபனமந்திரி திரு. எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயகா பேசியதாவது:-

"சமூக சேவை செய்வதென்பது உயர்குல மாதர்கள் உல்லாசமாக உடைகள் உடுத்தி ஆடம்பரமாய்ப் பவனிசெல்லும் சமூக வைபவங்களிற் பிரசன்னமாகி இருப்பதுபோன்றதாகும் என ஜனங்கள் கருதக்கூடாது.

சமூகசேவை, அதில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும், அதை அடைபவர்களுக்கும் பலனை அளிக்கிறதென்ற மனப்பான்மையில் நடைபெறவேண்டும். எத்தகைய சேவையும், அடக்க ஒடுக்கத்தோடு, உயரிய நிலைமையிலுள்ள ஒரு மானிடர், துரதிர்ஷ்டவசமான நிலைமையிலுள்ள தனது சகோதரர்களுக்கு உதவி செய்வதாகக் கருதிச் செய்யப்பட வேண்டும். "ஆண்டவனுக்கு அர்ப்பணம் என்ற முறையிற் சேவை செய்யக்கூடாது."

யுத்த சமாச்சார வியாக்கியானம்

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

டும்இவற்றுள்மகினோ அரண்களைத்தாக்குவதென்றால் பல்லாயிரக்கணக்கான ஜீவமோசமும் எதிர்த்தாக்கல்களினால் பெருஞ் சேதங்களும்விளையும். இதற்குச் சேனைத் தலைவர்கள் ஒருவரும் உடன்படமாட்டார்கள். அதனாற்போலும் ஹிற்லருக்கும் அவருடைய சேனாபதிகளுக்கும் பிணக்குத் தோன்றியது.

இத்தாலிக்கூடாகச் செல்வதும் இலகுவன்று. ரூஷிய ஜெர்மானிய ஒப்பந்தத்தின் பின்பு ரோம்-பேர்லின் அச்சுத் தெறிக்கத் தொடங்கி விட்டது. இத்தாலிய மந்திர சபையும் மாற்றமடைந்து விட்டது. அது நாசியாட்சியை வெறுப்பது. இப்பொழுது முசோலினியைக் காண்பதற்கு ஜெர்மன் தளபதி கோரிங் சென்றிருக்கிறார். போப்பாண்டவர் ஹிற்லரையும் அவருடையநடவடிக்கைகளையும் வெறுத்துக் கண்டித்தலாலும் ரூஷியருடைய சமதர்மக் கொள்கைகளை இத்தாலியர் ஒருபோதும்விரும்பாதவர்களாதலாலும் கோரிங் முசோலினியைச் சந்திப்பதனால் பெருநன்மை விளையுமென எண்ண இடமில்லை.

சுவிற்ஸர்லாந்து மூலமாகச் செல்வதற்கென்றால் ஜூரா மலைகள் முழுவதையும் தாண்டி மலையரண்களைத் தகர்த்து முன்னேற வேண்டும். அது இலகுவன்று.

பின்னர் ஒல்லாந்திற் கூடாகவோ பெல்ஜியத்திற் கூடாகவோ சென்று மின்னல் யுத்தம் புரிவதுதான் செய்யத் தகுந்தது போலத் தோன்றும். ஆனால் அத்தேசங்களும் சும்மா இருக்கவில்லை. அவைகளும் வேண்டிய பாதுகாப்பு முறைகளைக் கைக் கொள்ளுகின்றன. நேச தேசங்களும் அத்தேசங்கள் மூலமாகவரும் பகைவரை யெதிர்க்கத் தயாராகவே யிருக்கிறார்கள். அத்தேசங்களைப் பகைவர் தங்கள் பலவகைப் படைகளின் நிலயங்களாகப் பாவிக்க நேசதேசங்கள் விட்டுக்கொண் டிருக்க மாட்டா.

சென்ற வாரத்துச் சம்பவங்களுள் விசேஷமானவையிரண்டு. அவை ஜேர்மனிக்கு மிகவும் பாதகமானவையாகும். ஒன்று ரூஷியாவிலே திரு. மொலற்றோவ் செய்த பிரசங்கம். மற்றது அமெரிக்கருடைய நடுநிலைமைச் சட்டம்.

மொலற்றோவினுடைய பிரசங்கத்தை ஆவலோடெதிர்பார்த்திருந்தவர் ஹேர் ஹிற்லர். தமக்கு இராணுவ உதவி கிடைக்குமெனவும் தமக்குச் சார்பாகப் போரிலே பெரும் மாறுதல் ஏற்படுமெனவும் அவர் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தார். ஆனால் அது பாழாகிவிட்டது. அந்தப் பிரசங்கத்திலே ஹிற்லருக்கு ராணுவ உதவியளிப்பதைப்பற்றிய பேச்சு ஒன்றுமேயில்லை. யுத்த காரணத்தைக் குறித்து நேசதேசங்கள்மீது பழிபாத்திரம்சுமத்தப்பட்டிருக்கிறது

போல்ற்றிக் கடல்மூலமாக வேற்றரசர் படையெடுத்து வாராதபடி ரூஷியா தன்னைக் காப்பது கடனென்று மொலற்றோவ் கூறினர். பின்லந்துக் குடாவும் ஆலந்துத் தீவுகளும் அரண்பெற்றுப் பிறர் கையிலிருப்பது ரூஷியாவுக்குப் பேராபத்தை விளைவிக்கும். லெனின் கிராட்டுக்குச் செல்லும் பாதைகள் அடைபட்டுப் போம். ரூஷிய கடற்படையின் போக்குவரவு துண்டிக்கப்பட்டுவிடும். தேசங்கள் தங்கள் வாக்குறுதிகளை யெல்லாம் மதிக்காமற் காற்றிற் பறக்கவிடும் இக்காலத்திலே பின்லாந்திலுள்ள பாலிஸற் கட்டினைப் பலமடைய விடுவதற்கு ரூஷியா விரும்பவில்லை. போல்ற்றிக் நாடுகளில் ஜெர்மானியருடைய செல்வாக்குக் குறைந்துவரும் இந்தத் தருணத்தை இழந்து விடாமல் ரூஷியா தனது ஆதிக்கத்தைப் பலப்படுத்தி வருகிறது. இப்பொழுது வடகீழ் ஐரோப்பா ஸ்டாலினுடைய கையில் வந்துவிட்டது. 700 வருடங்களுக்கு மேலாகப் போல்ற்றிக் நாடுகளிலிருந்த ஜெர்மன் செல்வாக்கை இப்பொழுது ஹிற்லர் இழக்கச் செய்துவிட்டார். இது ஜெர்மனிக்குப் பெருநட்டமாகும். இனி ஜெர்மனியின் மற்ற கட்டத்தைப் பார்ப்போம்.

"ஆக்கிரமிப்பைத் தடுப்போருக்கு வேண்டிய உதவியைப் பேச்சளவில் நிறுத்தாமற் செய்கையிலே பலமாகச் செலுத்தவேண்டும்; ஆனால் போரிற் கலந்து கொள்ளக்கூடாது" என்று தாம் கூறியதற்கிணங்க அமெரிக்க தலைவர் இப்பொழுது நேசதேசங்களுக்குத் தம்மாலான உதவியெல்லாம் செய்வார். சென்ற சனிக்கிழமை அமெரிக்க நடுநிலைமையையும் போர்க்கருவித் தடையையும் பற்றிய சட்டம் அமெரிக்காவில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதனால் நேசதேசங்களுக்கு விளையும் நன்மைகள் அதிகமாகும். அச்சட்டத்திலே "காசைக் கொடுத்துப் பொருளையெடுத்துச் செல்லும்" விதியொன்றுளது. கொடுப்பதற்குக் காசு நேசதேசங்களுக்கு வேண்டியவரையுண்டு; ஆனால் ஜெர்மனிக்கு இல்லை. பொருளையெடுத்துச் செல்ல நேசதேசங்களுக்குக் கப்பலைப் பற்றிய கவலையில்லை. ஜெர்மனிக்கோ இப்பொழுது கப்பல்களுமில்லை. (இருப்பனவும் பொதுத் துறைமுகங்களிலொதுங்கிக் கிடக்கின்றன.) எனவே இச்சட்டத்தினால் ஜெர்மனிக்கு இவ்வளவு பலவீனமுண்டாகுமென்பது சொல்லாமலே விளங்கும்.

இனி மற்றும் விசேஷ நிகழ்ச்சிகள் யாவையெனப் பார்ப்போம். பிரிட்டிஷ் சக்கிராதிபத்தியத்திலுள்ள நாடுகளனைத்தும் ஏகமனத்துடன் பிரித்தானியாவுக்குத் தங்கள் பூரண ஆதரவையளிக்கின்றன. லண்டனிலே இதற்கெனக்கூடிய குடியேற்றநாடுகளின் மந்திரிகள் இதனை நிரூபித்தனர். பிரித்தானியாவுக்குவரும் துன்பம் தங்களுக்கே வருவது போலவும் பிரித்தானியாவின் நன்மையே தங்கள் நன்மையாவது போலவும் எல்லோரும் ஒன்றுபட்டிருப்பது இதனால் வெளிப்படையாகிறதென்று பிரதம மந்திரி திரு. சேம்பர்லேன் அவர்கள் சொன்னார்கள்.

தேசங்களெல்லாம் சிறு நாடுகளின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் அவமதித்துத் தடுமாறி அலங்கோலப்பட்டுக்கிடக்கும் இவ்வேளையிலே பல சாதியினரும் சமாதானமாகவும் அமைதியாகவும் ஒற்றுமையுடன் வாழ்வதற்கிடனாய் ஓர் உதாரணமாக விளங்குவது பிரிட்டிஷ் சக்கராதிபத்தியமாகும். அதுவே உலக சமாதானத்திற்கும் ஒருபெரும் சமாதானமாக விளங்குவதும் இத்தகைய உணர்ச்சியே அக்கூட்டத்தினிடங் காணப்பட்டது.

தொடர்ச்சி 6-ம் பக்கம்

ஜெர்மனியில் அதிசயக் கல்வி

போருக்கென்றே பாடசாலை

ஜெர்மன் மாணவர்கள் போதுமான அளவு இராணுவ முறைகளிற் பழக்கப்படவில்லை யென்று சேனைத்தளகர்த்தர்கள் குறை சொல்லுகிறார்களாம். இது பற்றி "டெய்லி டெலிகிராப்" பத்திரிகை கீழ்க்கண்டவாறு எழுதுகின்றது:—

ரசாயன பாடங்கள் கற்பிப்பதென்றால், யுத்தத்தில் விஷ வாயுக்களை எப்படி உபயோகிப்பதென்றும் இதர ரசாயன வஸ்துக்களை எப்படி எதிரிகள் மீது செலுத்தி வெற்றி பெறலாமென்றும் போதிப்பதாயிருக்கவேண்டும். சாதாரணப் படிப்பினால் பயனில்லை. அதே விதமாகக் கணக்கு (கணிதம்) படிப்பிப்பதென்றால் துப்பாக்கி அதிர்வையும் குண்டு பாய்வதையும் டாங்கு முதலியன இயங்குவதையும் அளந்து சொல்வதாயிருக்க வேண்டும். பூமிசாஸ்திரம் எதிரி நாடுகளின் மர்மஸ்தானங்களைக் காண்பிப்பதற்கன்றி வேறெதற்கும் பிரயோசன முடையதல்ல. சரித்திரத்தினால் ஜெர்மானியரின் பழம் பெருமையும், மேனாளில் அவர்கள் சாதித்த அரிய காரியங்களும் விளங்க வேண்டும்.

இவ்வாறு தற்போதைய ஜெர்மன் கல்வி இல்லாதிருப்பதால் இராணுவ அதிகாரிகள் புதிய முறைகளைப் புகுத்தியிருக்கிறார்கள். அம்முறைப்படி ஒவ்வொரு டிஸ்திறிக்கிலும் பயிற்சி நடைபெறுகின்றதா வென்று பரிசோதிக்க, டிஸ்திறிக்குக்கு இரண்டு இராணுவ உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

உலகம்பலவிதக் கதை

ஊரில் நிகழ்ந்தவை

இராசசேகரன் தன் பெற்றோருக்கு இடையிடையே தனது சுகத்தைப் பற்றியும் கல்வி விருத்தியையிட்டுங் கடிதம் எழுதி வருவானாயினன். அப்படியெழுதும்போதெல்லாம் ஞானம்பிகையின் சுகத்தையும் தன் மாமியின் சுகத்தையும் விசாரித்து எழுதும்படி தன் தகப்பனுக்கு எழுதுவதுண்டு; தகப்பனும் அவ்விருவருக்கும் இராசசேகரனுடைய சுகத்தைச் சொல்லி அவர்களிடம் சுகங் கேட்டு இராசசேகரனுக்கு எழுதி வருவார். ஒரு நாள் அருளம்பலத்தார் மனைவி தன் மகளாகிய ஞானம்பிகையைப் பார்த்து "மகளே ஞானம், நீ அவருக்குக் காகிதம் எழுதலாமே, அவருடைய சுகத்தை விசாரிக்கலாமே, எப்படிப்பார்த்தாலும் அவர்தானே உன் புருஷன்; அவருக்கு நீ கடிதம் எழுதினல் ஒருவருங் குறைசொல்லமாட்டார்களே, அப்படிச் செய்தாலென்ன" என்று கேட்டாள். "அம்மா, நீங்கள் சொல்வதெல்லாம் நிசம்; எனக்கும் கடிதம் எழுதத்தான் விருப்பம்; அவருக்குக் கடிதம் எழுதாமல் வேறு ஆருக்கு நான் கடிதம் எழுதுவது; ஆனாலும் அவர் கடிதம் எழுதிய பிறகு நான் எழுதுவது தான் முறை" என்று இராசசேகரனிடத்தில் அன்புபெருக ஞானம் தாய்க்குச் சொன்னாள். "ஓம், கண்ணே நீ சொல்வது நியாயந்தான்" என்று தாயும் மகள் சொன்னதை ஏற்றுக் கொண்டாள். ஊரைவிட்டுப் படிக்கப் பட்டினத்திற் சென்ற தொடக்கத்தில் இராசசேகரன் கிழமைக்கு இருமுறையும் பின் கிழமைக்கு ஒருமுறையும் தன் பெற்றோர்க்குக் கடிதமெழுதிவந்தவன், சில மாசங்கள்செல்ல இரண்டுவாரத்திற் கொருமுறையும் பின்னருஞ் சில நாட்செல்ல மாசமொரு கடிதமும் எழுதத் தலைப்பட்டான். உடனுக்குடன் ஏன் கடிதம் எழுதுவதில்லையென்று அவன் பிதா அவனுக்குக் கடிதம் எழுதியபோது இடைப்பரீட்சை சமீபித்துவிட்டதென்றும் படிப்பு நெருக்கத்தினால் அப்படிச் செய்ய முடியவில்லையென்றும் அதையிட்டுக் குறைநினைக்க வேண்டாமென்றும் சமீபத்தில் விடுமுறைநாட்கள் வருமாதலால் தான் ஊரில் வந்து ஒரு மாசகாலம் நிற்க முடியுமென்றும் இராசசேகரன்பதில் எழுதியிருந்தான். பெற்றோரும் அவன் எழுதிய சமாதானத்தை மெய்யென்று நம்பி ஏற்றுக்கொண்டார்கள்.

நீங்கள் இதைப்பற்றி நேரிற் பேசுங்கள்

இவை இங்ஙனமாக, இராசசேகரனுக்கும் சொர்ணம்பிகைக்குமிடையேயுள்ள அன்பானது நாளுக்கு நாள் விருத்தியடைந்து வரலாயிற்று; எப்படி அதிகமாக விருத்தியடைந்துவந்ததெனினும் சொர்ணம் தான் கன்னிகையென்ற நியதியிற் சிறிதுந்தவறாது நடந்து வந்தாள். "சிறை காக்குங் காப்பு எவன் செய்யும் மகளிர் —நிறை காக்கும் காப்பேதலை" என்பது தமிழ்த் தெய்வப் புலவர் வாக்கல்லவா? அதனைத் தமிழ் மகளாகிய சொர்ணம் மறந்தாளல்லள். சில சமயங்களில் தாய் தன் மகளைப் பார்த்து "கண்ணே, சொர்ணம், அவரிடத்தில உனக்கு அதிக அன்புண்டென்பது மெய், ஆனாலும் அவதானமாக நடந்துகொள்ளவேண்டும்; குடிக்குவழிக்கில்லாத வசையைத் தேடிவிடக் கூடாது" என்று குறிப்பாகச்சொல்லுவாள்; அதற்கு மகள் சிரித்துக்கொண்டு "அம்மா, என்னை அப்படி எண்ணவேண்டாம்; கிணற்றுநீரை வெள்ளம் அள்ளிக்கொண்டு போக முடியுமா? குடிக்குப்பிறந்து செடிக்குள் தலை வைப்பேனா? மழைக்காலிருட்டானாலும் மந்தி கொம்பிழக்கப் பாயாது; பெற்ற தாயாகிய நீங்கள் உங்கள்மகள்மீதுசந்தேகப்படலாமா?" என்று மனப்பூர்வமாகப் பல பழமொழிகளையும் நியாயங்களையுந் தாய்க்குச் சொல்லுவாள். தாயும் மகள் சொல்லும் வார்த்தைகளையும் நியாயங்களையுங் கேட்டுக்கேட்டு மகிழ்ச்சியடைவாள். இப்படியிருக்க, இராமன் சொன்ன நியாயங்களில் திருப்திப்படுதலின்றி ஆத்திரங்கொண்ட கிளாக்கர் மனைவி பின்னரும் ஒருநாள் தன் கணவன் போசனஞ் செய்துவிட்டு ஆறுதலாக இருக்கும் அற்றம் பார்த்து "என்ன பாருங்கள், நான் மீட்டும் மீட்டுஞ் சொல்லச் சொல்ல நீங்கள் பாராமுகமாக இருக்கிறீர்கள்; அந்தப் பிள்ளையுடன் நீங்கள் நேரிற் பேசி இந்தக் கருமத்திற்கு ஒரு முற்றுக் கேளுங்கள்; மனுஷன் காயம் நிச்சயமா? இப்பொழுது சடங்கு செய்ய முடியாவிட்டாலும் கல்யாணத்தை எழுதி வைத்துவிடலாமே, சோதனை முடிந்தபின் கல்யாணத்தைச் செய்துவைக்கலாமே; அங்கோ இங்கோ, உண்டோ இல்லையோ என்ற சந்தேகத்துடன் எத்தனை நாளுக்கு இருக்க முடியும்? பெண் பிள்ளைகளின் பொறுப்பு தகப்பனைக் காட்டிலும் பெற்றவளுக்கல்லவா அதிகமாகவுண்டு நெடுக இரண்டுபேரையும் இப்படி விட்டுக்கொண்டிருந்தால் பார்த்தவர்கள் என்ன சொல்லுவார்கள்; பனைமரத்தின்கீழ் பாலை வைத்துக் குடித்தாலும் கண்டவர்கள் கள்ளென்று தானே சொல்லுவார்கள்; ஆனபடியால் இன்றைக்கு இதற்கு நீங்கள் ஒருமுற்றெடுக்க வேண்டும்; அந்த ஆளுடன் நீங்கள் இந்த விஷயமாக நேரிற் பேசுவதல்லாமற் பெண்ணைப் பெற்றவள் நான் நேரிற் பேசமுடியுமா? இன்றைக்கே பின்னேரம் பள்ளிக்கூடத்திலிருந்து அவர் வந்தபின்பு கேட்டு ஒரு முடிவெடுங்கள்........" என்று மனைவி கிளாக்கருடன் பரிந்து வற்புறுத்திச் சொன்னாள். மனையாள் சொல்லச் சொல்லக் கேட்டுக் கொண்டு ஆழ்ந்த சிந்தனையோடு இருந்தவராகிய கிளாக்கர் பெருமூச்சுவிட்டு இறுதியில், "சரி, நான் இன்றைக்கு அந்தப் பிள்ளையுடன் நேரில் இந்த விஷயமாகப் பேசுகின்றேன்; ஆனால் உடனே முற்றுச் சொல்லச் சொல்லிக் கேட்பது முறையல்ல; பையன் தன்தாய் தகப்பனுக்கும் இதையிட்டு எழுதி அவர்களுடைய சம்மதத்தையுங் கேட்கத்தானே வேணும்; அப்படியல்லவென்று நாங்கள் பையனுடைய சம்மதத்தைமாத்திரம் பெற்று இக்கல்யாணத்தைச் செய்து வைத்தால், அது எங்களுக்குப் பெருமையாகவிருக்கமாட்டாது; படிக்க வந்த பையனை அமர்த்தித் தங்கள் மகளுக்குக் கல்யாணம் முடித்துவிட்டார்கள் என்று அயலட்டத்திலுள்ளவர்கள் எங்களைக் குறைசொல்வார்கள்; ஊரார் சிரிப்பர், உலகம் வசைசொல்லும்; பையனுடைய பெற்றோரும் கேள்விப்பட்டால் மனம் வருந்தி எங்களைப் பகைப்பர்; ஆனதால நீ அவசரப்படாதே, மெல்ல மெல்லப் பாயுந் தண்ணீர் கல்லையும் உருவிப்பாயும்; எப்படியோ இன்றுபின்னேரம் பையனுடன் இந்த விஷயமாக நான் நேரிற் பேசுகிறேன்; ஆனால் சொர்ணத்திற்கு இதையிட்டு ஒன்றும் பேசாதே" என்று மனைவிக்குச் சமாதானஞ் சொன்னார். "நீங்கள் பேசுவீர்களென்றெனக்குத் தெரியும், ஆனால் சும்மா எங்கள் பிள்ளையைத் தம்பி நீர் கல்யாணஞ் செய்து கொள்ளவேண்டுமென்று கேட்டுவிட்டு வருவதல்ல; எங்கள் பிள்ளைக்குள்ள சீதனம் படிப்பு நல்ல பழக்கம் குலங் கோத்திரம் சீர்திருத்தம் இவைகளை யெல்லாம் அந்தப் பையனுக்கு நீங்கள் ஒன்றொன்றாக எடுத்துச் சொல்ல வேணும்; எங்கள் பிள்ளையைப்போல் அருமையான பெண் அந்தஆளுக்குக் கிடைக்குமா? இன்னமும் நீங்கள் உழைக்கும் பொருள் பண்டங்களை யெல்லாம் வேறு யாருக்கேனுங் கொடுக்கப் போகிறோமா? இன்னும் என்ன வந்தாலும் எங்கள் பிள்ளைக்குத்தானே கொடுப்போம்: வைத்துவிட்டுப் போவோம், எத்தனை எத்தனை இடங்களிலிருந்து எங்கள்பிள்ளைக்கு மாப்பிள்ளை பேசிவந்தார்கள்; நாங்கள் சம்மதப்படாமையினாலல்லவோ அவர்கள் விட்டுவிட்டுப் போய்விட்டார்கள்; இவைகளையெல்லாம் அந்த ஆளுக்கு எடுத்துச் சொல்லுங்கள்; நான இந்தச் சம்பந்தத்தில் அதிகம் அழுத்தி நிற்கமாட்டேன்; ஆனால் எங்கள் மகள் பிடிவாதமாக நிற்கிறாள்; அதனாற்றான் பார்க்கிறேன்" என்று பின்னரும்மனையாள் பரக்கப் பேசினாள்; கிளாக்கர் ஒரு பெரிய மனுஷன்; தம்முடைய மனையாளிடத்திலுள்ள குறைகளை அவர் அறிவார்தானே; அதனால் மனைவியின பேய்த்தனமான பேச்சுக்கு ஒரு பதிலுஞ் சொல்லாமல் மீட்டும் "சரி, நீ சொல்லுகிறபடியெல்லாம் அந்தப் பிள்ளையுடன் நான் பேசுகிறேன்" என்று சொன்னார்; மனையாளும்

தொடர்ச்சி ௫-ம் பக்கம்

பொழுது போக்கிற் புதுமை

பிரயாணஞ் செய்கிறது மாதிரிக்கப்பல்

ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஓடிக்கொண்டிருக்கும் கப்பல்களிற் பிரபலம் வாய்ந்தது "க்வீன் மேரி." அது அழகும் விரைவும் பாதுகாப்புமுடைய தென்பது உலகப் பிரசித்தம். அதற்கு மாதிரிக் கப்பலொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் நீளம் 22 அடி, அகலம் 31 அங்குலம். பார்வைக்குச் சரியாக க்வீன் மேரியைப் போலவேயிருக்கின்றது.

அதில் இருவர் உட்கார்ந்து ஓட்டலாம்.

சமீபத்தில் அந்த மாதிரிக் கப்பலை டோரண்டோவிலிருந்து இரிபார்ஜ் கால்வாய் வழியாக நியூயோர்க் நகருக்கு ஓட்டிச் சென்றார்கள். 17 நாட்களிற் குறிப்பிட்ட இடம் சென்று சேர்ந்தது. அங்கு உலகச் சந்தையிற் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

கண்ணாடி உடைத்த குற்றம்

ஹிட்லர் மீது பழி

டேவிட் மார்ட்டின் என்னும் ஒருவன் ஒரு கண்ணாடி ஜன்னலை உடைத்த குற்றத்திற்காக விசாரிக்கப்பட்டபோது தப்பு முழுதும் ஹிட்லரைப் பொறுத்ததென்று வாதாடினான்.

சுமார் 20 பவுன் பெறுமானமுள்ள நாலுபேட்டை கண்ணாடி ஜன்னலொன்றை கிளாஸ்கோ வாசியான மேற்படி மார்ட்டின் உடைத்துவிட்டானென்று பொலிசார் குற்றஞ்சாட்டினார்கள். பொலிஸ் கோர்ட் விசாரணை செய்தபோது மாட்டின் குற்றம் தன்னுடையதல்லவென்று சாதித்தான்.

"அந்தப் பாழாய்ப்போன ஹிட்லரின் தொந்தரவால் கிழவன் முதல் சிசுவரையிலுமுள்ள எல்லோருடைய மூளையுங் குழம்பிப் போய்விட்டது. ஆதலால் எதுவும் நிதானமாய்ச் செய்யமுடியவில்லை. என்னைக் குறைசொல்லி என்ன பயன்?" என்றான் மார்ட்டின்.

மாஜிஸ்ட்ரேட் 30 நாள் சிறைத் தண்டனை விதித்தார்.

—0—

பிணஞ்சுடும் வழக்கம் பிரிட்டனில் பெருக்கம்

20 வருடத்தில் 250 மயானங்கள்

சில நாட்களுக்கு முன் ஸௌத்வி என்னுமிடத்தில் ஒரு மகாநாடு நடைபெற்றபோது, தலைமைவகித்த வார்டு ஹோர்டர் வருடாவருடம் பிரிட்டனில் பிணங்களைச் சுடும் வழக்கம் பெருகி வருகின்றதென்று கூறினார்.

அவர் அபிப்பிராயப்பட்டதாவது: சென்ற வருடம் பிரிட்டனில் 16 ஆயிரம் பிணங்கள் சுடப்பட்டிருக்கின்றன. 1926-ல் 3,400 பிணங்களை சுடப்பட்டன. கடந்த சுமார் 20 வருடங்களில் சுடுகாடுகள் 18 லிருந்து 47 ஆகப் பெருகியுள்ளன. இந்த மாதிரிப் பெருகிக்கொண்டேபோனால் இன்னும் 20 வருடங்களில் 250 சுடுகாடுகள் தோற்றிவிடும். அச் சுடுகாடுகள் ஒவ்வொன்றிலும் 1,000 பிணங்கள் செல்வதாக வைத்துக்கொண்டால் மொத்தம் 250 ஆயிரம் பிணங்கள் வந்துவிடலாம். அது கிட்டத்தட்ட பிரிட்டிஷ் மரணத்தில் சேர் பாதியாகிவிடும்.

இவ்வாறு பிணங்கள் புதைப்பதற்குப் பதிலாகச் சுடப்படுவதால்இடம் லாபமாவதோடு செலவும் மிச்சமாகின்றது. இப்போது புதைக்கப்படும் பிணமொன்றுக்கு 2 பவுன் விகிதம் செலவிடப்படுகிறதாம். அதாவது இடுகாடுகளைப் பாதுகாப்பதற்காக வருடாவருடம் 10 லட்சம் பவுன் செலவிடப்படுகிறது.

சுடுகாட்டுமுறை பிரசாரத்துக்கு வந்தால் ஒவ்வொரு ஊரிலும் ஒரு சுடுகாடு நிறுவப்படலாம். அப்படியானால் ஏழைகட்குக்கஷ்டம் தொலையும். இப்போது இறப்பது பணக்கஷ்டத்தை உண்டுபண்ணுகிறதென்று குறைசொல்கிறார்கள்.

தாயைக் கொன்ற தநயன்

மண்வெட்டியாற் றாக்கியதன் விளைவு

மாத்தளை, நவ 10

யத்வத்தையைச் சேர்ந்த கந்தோடை என்ற கிராமத்திலுள்ள திக்கிரிமேனிகா என்ற மாதின் மரணத்தைப்பற்றி மாத்தளை நீதிபதி விசாரணை நடத்தினார். மேனிகா அவளுடைய குமாரரான திக்கிரி பண்டாவினாற் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டது. விசாரணையிற் கூறப்பட்ட சாக்ஷியத்திலிருந்து தெரிய வந்தது:—

திக்கிரிபண்டாவின் மனைவியான பொடிநோனா பக்கத்து வீட்டிலுள்ள ரன்மேனிகாவிடமிருந்து ஒரு கூடையை வாங்கியிருந்தாள். அக்கூடை திருப்பிக் கொடுக்கப்படாததால் ரன்மேனிகா கூடையைக் கேட்டபொழுது அதைக் கறையான் அரித்துவிட்டதாகவும் பின்னரதைக் கொடுப்பதாகவும் பொடிநோனா கூறினாள். இதன் பலனாக இரு ஸ்திரீகளுக்குள்ளும் வாய்ச்சண்டை ஏற்பட்டு ஒருவரை ஒருவர் தூஷித்துப் பேசினர். காலஞ்சென்ற திக்கிரி மேனிகாவும் இச்சண்டையிற் சேர்ந்து கொண்டாள். இதனால் திக்கிரி பண்டா தன் தாயாரை ஏசினார். தாயாரும் தன் மகனை ஏசினாள். அதன்பின் திக்கிரி பண்டா ஒரு மண்வெட்டியால் தனது தாயாரைத் தாக்கியதாகவும் அதன் விளைவாக அவள் இறந்ததாகவும் கூறப்படுகிறது. திக்கிரிபண்டா கைது செய்யப்பட்டு விசாரணை தவணையிடப்பட்டது.

மிகிந்தலையிற் கோரச் சம்பவம்

19 வயதுள்ள வாலிபரின் பரிதாப முடிவு

அநுராதபுரம், நவ, 12—

சென் யோசெப்ஸ் கல்லூரி மாணவரும் இவ்வூர்ப் போஸ்ற்மாஸ்றர் மிஸ்டர் ஜீ. எப். சமரவீராவின் குமாரருமான நெவில் சமரவீரா எனனும் 19 வயதுள்ள வாலிபர் இன்று மிகிந்தலை ஆடியா போகுணவில ஸ்நானஞ் செய்யும்பொழுது தண்ணீரில மூழ்கி மரணமானார்.

இறந்த வாலிபர் பாடசாலை மாணவர்களுடன் ஓர் உல்லாசச் சுற்றுப் பிரயாணத்திற்குச் சென்றிருந்தார். மரணவிசாரணையின் பின், வாலிபர் தண்ணீரில் மூழ்கி அகஸ்மாத்தாக மரணமானார் எனத் தீர்ப்புக்கூறப்பட்டது.

கற்பழித்ததாக வழக்கு

எதிரிக்கு 4 வருடக் கடுங்காவற் றண்டனை

வவனியாவைச் சேர்ந்த அப்புராலகே பண்டா என்பவர் அவ்வூர் கப்புராலகே ரங்கதானை என்னும் பெண்ணின் கற்பைச் சென்ற 1938-ம் ஆண்டு மே மாதம் 14-ந் திகதி அழித்ததாகக் குற்றஞ்சாட்டிய வழக்கு யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணையின் பின் 'ஜூரிமாரிற் பெரும்பாலோர் எதிரியைக் குற்றவாளியாக்கக் காண்பதாகக் கூறினர். நீதியாசர் எதிரிக்கு நாலுவருஷக் கடுங்காவற் றண்டனை விதித்தார்.

ந-தி

ஹிட்லரின் இரகசிய ஆயுதம்

செக் பிரஜைகூறும்விபரம்

ஜெர்மனியை விட்டுத் தப்பி வெளிவந்த ஒரு செக் வியாபாரி ஹிட்லரின் இரகசிய ஆயுதத்தைப்பற்றி அறிவிக்கிறார்:—

ஜெர்மனியரிடம் "டைபோயிட்" சுரம், காசரோகம் முதலியவற்றையும் பல தொற்றுநோய்களையும் உற்பத்தி செய்யும் விஷக் கிருமிகள் நிரம்பிய குண்டுகள் இருக்கின்றனவாம். அவற்றைத்தான் ஹிட்லர் டான்ஸிக்கிற் பிரசங்கஞ் செய்யும்போது "அபூர்வ ஆயுதம்" என்று குறிப்பிட்டார்.

அக்குண்டுகளைப் பெரும் நெருக்கடி ஏற்படும்போது உபயோகிப்பார்களாம். அப்படியாயின், உலக ஜனத்தொகையில் நேர்பாதி காலியாகிவிடும் என்பது மேற்படி வியாபாரியின் கூற்று.

அவர் மேலும் சொல்வதாவது:—

நோய்க்குண்டுகளிலிருந்து தப்ப வேண்டுமானால் இப்பொழுதே பாதுகாப்பு வழிகளைத் தேடிக்கொள்ள வேண்டும். எல்லாப் பிரஜைகளும் உடற்பயிற்சி மூலம் தேகத்தைக் கெட்டிப்படுத்திக் கொள்வது நல்ல முறை. விஷக் கிருமிகளை அழிக்கும் மருந்துகளைத் தயாரித்து வைப்பது இரண்டாவது வழி. ஒவ்வொருவரும் தினசரி இருமுறை "கார்போலிக்" திராவகம் கலந்த தண்ணீரில் ஸ்நானஞ் செய்வது மிகவும் உசிதமானது.

இவ்வாறு தனி மனிதர்கள் செய்துகொள்ளும்போது, வைத்திய நிபுணர்கள் பெரிய வட்டாரங்களில் மருந்துகளைத் தூவும் சக்தியுடையகுழாய்களை ஆங்காங்கு நிறுவிக்கொள்ள வேண்டும்.

ஹிட்லர், நோய்க் குண்டுகளை வீசும்போது எவ்வித முன்னறிவிப்பும் தராமலிருக்கலாம். அவருக்கு மனிதர்களைப்பற்றியோ கடவுளைப் பற்றியோ கவலை கிடையாது.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு வ. ராம. சிவகுருநாதபிள்ளை என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:-

1938ம் ஆண்டு மார்ச்சு மாசம்

நம்.	தி.	ரூ. ச.	ஊர். பெயர். நகையின் விபரம்.
597	16	110	வண்மேற்கு க. மாரிமுத்து சில்லறைஉருப்படியுடன் தாலிக்கொடி1
	மே மாசம்		
686	16	5	குசவன்குளத்து ரோட்டு T.K.S. அபுபக்கர் சிறுபிள்ளை கட்டைக்காப்பு சோடி 1
700	25	645	அனலைவெட்டி வெ. செல்லப்பா இமி கல் முகப்புடன் செனிக்காப்பு சோடி 1 டை பசலிக்காப்பு சோடி 1 சிகப்பு பச்சை முத்தும் வயிரச்சன்னம் ஒன்றும் கட்டிய பதக்கத்துடன் செட்டிப்பூரானட்டியல்1 வளையல் செனிஅச்சுக்காப்பு சோடி3 மூருக்குக்காப்பு சோ 1 வளையல் அச்சுக்காப்பு சோடி1 கழுத்துச்சங்கிலி1 கொண்டைப்பூ1
	ஜூன் மாசம்		
711	12	17	புத்தூர் அ. சேனாதராயர் இமிகல் டிம்பியுடன் லாகெல் பதக்கம் 1
	ஜூலை மாசம்		
769	30	28	ஏழாலை கா. தம்பையா இமி நீலக்கல் மோதிரம் சோடி ஒன்று [சிகப்புக்கல் தோடு சோடி 1
	ஆகஸ்டு மாசம்		
782	5	9	நெடுந்தீவு மேற்கு க. கந்தையா ஒன்றுக்கு ஒரு கல்லில்லாத இமி
853	31	120	நீராவியடி க. சுப்பிரமணியம் இமிகல் பதக்கத்துடன் வி அட்டியல்1
	செப்டம்பர் மாசம்		
867	3	32	வண்கிழக்கு க. அப்புத்துரை சிறுபிள்ளைக்காப்பு சோடி 1
869	4	7	கோனான்தோட்டம் கா. நாகலிங்கம் இமி சிகப்புக்கல் ஒன்றும் முத்திரண்டும் வைத்த மோதிரம் 1
885	12	8	புத்தூர் சி. ஆறுமுகம் தாலி நடை 6
943	26	5	நீராவியடி மு. பொன்னம்பலம் இமிக்கல் கொப்பு சோடி 1
950	28	70	நீராவியடி மு. சபாபதிப்பிள்ளை அச்சுக்காப்பு சோடி 1

விற்பனவு நிகழும் பிரமாதி வருஷம் கார்த்திகைமாசம் 17ந் தேதி (2-12-39) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை பிறசிங்கலாக மிகுதி மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெந்திஸ்மேய்ஸ்தர்.

(Mis. 192. 16 & 20.11-39)

காரைநகர்

சுப்பிரமணியவித்தியாசாலை 50-ம் ஆண்டு நிறைவுப் பொன்விழா அறிக்கை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டகிலத் திருத்தம் முதலியனவெல்லாஞ் செய்து சிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை நிறைவேற்றுமாறு முயலுங்கால் பிறர் கூறும் எவ்வகை மொழிகளையும் பொருட்படுத்தாது கருமமே கண்ணாய் உள்ளூர், பிறவூர்களிலும், மலாய்நாட்டிலுஞ்சென்று சென்று பணவுதவி முதலியன பெற்றுக் கருமங்களை நடாத்தினர், நடாத்துகின்றனர். முக்கிய மனேஜர்மார் காலங்களிற் போல உபாத்தியாயர் சம்பள முதலாயின விநியோகஞ் செய்யும் பொறுப்பில்லாமயினும் தமது தளரா முயற்சியால் மேற்கூறியவைகளை நிறைவேற்றிப் பாடசாலையை நடாத்துவது வியக்கத்தக்கது. "ஆம்பொருணமதேயானுல் அறம்பிறக்காவதண்டோ" வென்றவாறு பொருளுதவிசெய்தோர் சிலர். ஒருதங்களுறுப்பலர்முன்னிற்க மூலவது பற்றிப் பிணக்குகள் நேரிட்டது முண்டு. அவையெல்லாம் பரிதிகண்ட பனிபோலாமாறு இவர்செய்த இப்பணிகள் பாடசாலையைச் சிறப்பிக்கின்றன.

இனி இப் பாடசாலையிலே ஆரம்ப முதலாக ஏறக்குறைய 25 ஆசிரியர்கள் பணியாற்றி இருக்கின்றனர். இவர்களுள் எவராவது தமது பணியில் தவறியவர்களாகவேனும், தமிவிருத்தியுதவியிற் குறைந்தவர்களாகவேனும் கருதப்பட்டிலர். டீசுகாதுயர்வு நிறுத்தப்பட்டிலர். குற்றப்பாடுற்றிலர். நீக்கப்பட்டிலர். இவ்வாற்றானே இங்கு கற்பித்தோருயர்வையும், கல்வித்திறமையையும் எடுத்துக்கூறவேண்டியதில்லை. புகழுரைகளும் உயர்வுக் குறிப்புகளும் சான்று பகரும்.

இங்கு கற்றுத்தேறிய பழைய மாணவர்கள் பலர் நல்ல சைவக் கல்வியும், தமிழறிவும் பெற்று மேனிலையடைந்து மிளிருதல் கண்கூடு. பின்பு வேறெவ்வித கலாபிவிருத்தி பெற்று மிளிரினுஞ் சிறந்தவர் ஆயிரக்கணக்கானோர் சுப்பிரமணிய வித்தியாசாலை மாணவரென்பதும் நாகமுத்துபாத்தியாயர் மாணவரென்பதும் மிகையாகாது.

வித்தியாபகுதியாரின் புதுப்பிரமாணங்கள் காரணமாகவும் பிறவாற்றானும் நம்மூர்ச் சைவபாடசாலைகள் சென்றவாண்டு சிறிது சோர்வுற்ற கீழும் மிஷன் பாடசாலைகள் வரவுகூடிச் சிறக்கவும் காணப்பட்டன. சைவாபிமானமிலை நம்மூரில் இருந்தபடிதான் என்னே! இப்போது இப் பாடசாலையில் 6 உபாத்தியாயர்களும் 190 பிள்ளைகளும் (S. S. C) சேட்டு வகுப்புவரை 10 வகுப்புகளும் உண்டு. சென்ற பரீட்சைப் பெறுபேறு S.S.C. யில் 4: 3 பேர் சித்திபெற்றுள்ளனர். இதனுலும் இப்பாடசாலையின் கல்விப்பயன் நன்கு விளங்கும் ஆனல் வித்தியாபகுதி இனிமேல் ஆசிரியர்கள் வேதன விஷயமாகவும் தொகைவிஷயமாகவும் பாடசாலைகளுட் புகுத்தவிருக்கும் பிரமாணங்கள் கல்வி நிலைக்குக் கூடிய பங்கம் செய்யுமென்பதையும் இங்கு குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

அன்றியும் இப்பாடசாலையின் அபிவிருத்தி கருதி நவராத்திரி தினங்களிலும் மற்றக் காலங்களிலும் உதவி கேட்டபொழுதெல்லாம் உள்ளூரினும் பிறவூரினும் உதவிசெய்த பெரியோர்கள் பலராவார். பொதுவாகக் கூறுமிடத்துச் சைவாபிமானிகள் யாவரும் பெரிதும் விரும்பி உதவி செய்து வந்ததன் பெறுபேருகவே இவ்விதாலயம் இங்ஙனம் ஐம்பதாண்டு வளர்ந்து பொன்விழாக் காட்சிபெற்று மிளிர்கின்றது.

"தேடினோர் யாவரெழுவகையானுஞ்சீர்த்தி
நீடினு ரவரேயென்பர் நீணிலத்
துயர்ந்த மாந்தர்" அன்றே.

இன்னும் இச் சைவப் பாடசாலையாகிய சுப்பிரமணிய வித்தியாசாலையிலே மூன்றும் வகுப்பு முதலாக சைவசமய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. விசேஷமாகக் கொழும்பு விவேகாநந்த சபையார்கள் சமயபாடப் பரீக்ஷை ஒழுங்கு நியமனஞ் செய்யப்பட்ட காலந்தொடக்கமாக இப் பாடசாலையிலிருந்து பிள்ளைகள் பரீக்ஷைக்கனுப்பப்பட்டும் சித்தியடைந்தும் யோக்கியதாபத்திரம் பெற்றும் வருகிறார்கள். ஆயினும் இன்னும் வேண்டிய அளவு சைவக்கல்வியும், உயர்தர தமிழ்க்கல்வியும், தேவார திருவாசக பாராயண இசைக்கலையும் சிறப்புற அமையவேண்டி இருக்கிறது.

உலகத்திலே எவ்வித ஸ்தாபனங்களினும் கருத்து வேறுபாடும், கட்சிப்பிரிவினைகளும் உண்டாவதியல்பு. நமது தாய் நாடாகிய இந்தியாவின் காங்கிரஸ் மஹாசபை நிர்வாகத்திலும் அன்றோ இப்போது சிற பிளவு காணப்படுகிறது. அங்ஙனமே இப்பாடசாலை சம்பந்தமாகவும் இடையிடையே கருத்துவேறுபாடுகளும் பிளவுகளும் ஏற்பட்டதுண்டு. அவற்றைக் கருமமே கண்ணாயினோர் சித்தியார். ஆதலின் அவற்றால் பாடசாலை இடையூறுற்றிலது. இனிமேலும் உறாது ஓங்கும். நன்று கூ' இவ்வாலயத்தாரையை முடிப்பேன். நமது நாட்டுச் சைவாபிமானிகள் பலர் சமயாபிமானங்கருதி மற்றெத்தனைய செயல்களையும் செய்யத்தக்க தியாகமுடையவர்களாக விளங்கினும் தமது இளஞ் சிறார்களைச் சைவப் பாடசாலைகளுக்கே அனுப்பவேண்டுமென்பதில் மாத்திரம் தணிவுபெறுகின்றார்களில்லை. துணிவினும் தற்பமான மாறுதலைக்கண்டவுடன் சிலையாறிவிடுகின்றனர். நியாயங்களும் கூறிவிடுகின்றனர். இது சரியன்று. பண்டைத் தமிழ்நூல்களையும், நமது சமயசாஸ்திரங்களையும் நன்கு தெரியவிடாது மூடி அடைப்பட்டிருக்கும் அஞ்ஞானப்பூட்டுகளைத் தருக்ககளங்கமற்ற தமது சிறவருள்ளத்தைத் திறக்குந் திறவுகோல்கள் சைவப் பாடசாலைகளேயென்பதைச் சிறிதும் சிந்திக்கின்றிலர். "இளமையிற்கல்வி சிலையிலெழுத்" தன்றோ. அந்த இளமை புன்னம் புறசமயிகளால் கெடுக்கப்படுமாயின் திருத்தமுடையாவதெப்படி? உயர்வடையுமாறெது? எல்லாம் கேடுறும். உலகத்திலே தற்காலக்கெடுதிக்கேது சமயப்பற்றின்மை மிகுதியாமென்றன்றோ யாவரும் உறுதி கூறுகின்றனர். ஆகையால் கள்ளிருளிலே நடுக்கடலிலே திசைதப்பி மயங்கும் மாலுமிக்குக் கலங்கரை விளக்கம் அமைந்த தறை தோன்றியதுபோலு மன்றோ சமயக்கல்வி ஒழுக்கத்தோடு கூடிய கல்வி என்பதனைச் சைவப்பெரியோராகிய நம்மவர்கள் யாவரும் சிந்திப்பாராக.

இச்சிந்தனை மிகுந்த சைவசமயிகள் யாவரும் ஒழுகச், சைவசமயம் பிரகாசிக்க பொன்விழாக்காட்சி பெற்ற இச் சுப்பிரமணிய விதாலயம் மேலுஞ்சிறக்கக் காரைநகர் வாழ நாடுபொலிய எல்லாம் வல்ல இறைவன் இறைவன் திருவருள் புரிவாராக. சுபம், சுபம், சுபம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக
உலகமெலாம்."

[டி வித்தியாசாலையின் பொன்விழா 29-4-39ல் கௌரவ சேர். வை. துரைசுவாமியவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. பாடசாலையின் 50 யாண்டுகளின் விரிவான அறிக்கைகளும் பிறவும் அமைந்த நினைவுமலர் (பொன்மலர்) வெளியிட முயன்றபோது பாடசாலைத் தொடர்புடையோரும் சைவாபிமானிகளும் விண்ணப்பத்தைக்கேட்டு அத்துறையில் நன்கு ஊக்கிறசில்லை. நடைமுறையும் சோர்வடையச் செய்துவிட்டது. ஆயினும் பாடசாலையபிமானிகள் இனியாவது ஊக்கங் கொள்ளாரோ என்னுங் கருத்தால், விழா அவையில் வித்தியாசாலையின் தலைமையாசிரியர் பிரமஸ்ரீ. ச. பஞ்சாக்ஷரையரவர்களால் வாசிக்கப்பட்ட அறிக்கைமாத்திரம் இப்போது வெளியிடப்படுகின்றது.]

உலகம்பலவிதக் கதை

4ம் பக்கத் தொடர்ச்சி

சிறிது மன ஆறுதலடைந்து தன் கருமங்களைப் பார்க்கப் போனான். கிளாக்கர் பின்னரும் அதிக சிந்தனையோடு இருக்கக் காணப்பட்டார்; இராசசேகரனும் சொர்ணமும்பள்ளிக்கூடத்திலிருந்து மீண்டுவந்தவர். இராசசேகரன் தன் விடுதிக்குப்போகச் சொர்ணமும் ரதத்திலிருந்து இறங்கித் தன் வீட்டிற்கு வந்தாள்.

சீதனப் பேச்சு

தம் மனையாள் சொன்ன நியாயங்களுஞ் சரிதான் என்று கிளாக்கர் யோசித்துக் கொண்டு சற்று நேரஞ் செல்ல இராசசேகரன் இருக்கும் விடுதிக்குக் அவர் போனர்; கிளாக்கர் அன்று தான் முதன் முதல் இராசசேகரன் இருக்கும் அந்த விடுதிக்குப் போனவர்; அவர் வரவைக் கண்டமாத்திரத்தே அவன் அவரைப் பெரிதும் உபசரித்து ஆசனமுதவி இருக்கச் செய்து அவர் சொற்படி தானும் ஒரு நாற்காலியில் விநயத்துடன் இருந்தான்; முன் ஒருபோதும் தன் விடுதிக்கு வராத கிளாக்கர் அன்று வந்த நோக்கந்தான் என்னையோ என்று தன்னுளவில் யோசித்தான். கிளாக்கர் அவனுடைய கல்வி விருத்தியைப் பற்றிச் சிறிது விசாரணை செய்துவிட்டு, அங்கு ராமன் நிற்பதால் வேறொன்றும் பேசாது சும்மாவிருந்தார்; அதனைக் குறிப்பாலுணர்ந்த ராமன் தான் கிளாக்கர் வீட்டுக்குப் போய் வருவதாக இராசசேகரனிடஞ் சொல்லிவிட்டு அப்படியே போனான். அதன் பின் கிளாக்கர் இராசசேகரனைப் பார்த்து "தம்பி, இன்று உம்முடன் ஒரு பிரதானமான கருமத்தைப்பற்றிப் பேசும்படிவந்தேன்" எனவும், இராசசேகரன் "சொல்லுங்கள்" என, கிளாக்கர் சொல்லத்தொடங்கினர். "தம்பி, நீரும் உமது பெற்றோர்க்கு ஒரேயொரு பிள்ளை, கடவுள் கிருபையால் நல்லசெல்வஞ் செல்வாக்குடன் இருக்கிறீர்கள்; சொர்ணமும் அப்படியே எங்களுக்கு ஓரேயொரு மகள்; நீரும் நன்கு படித்திருக்கிறீர்; அவளும் அப்படியே படித்திருக்கிறாள்; நீங்கள் இருவரும் ஒருவர்மேல் ஒருவர் அன்புடையவர்களாக விருக்கிறீர்களென்பதை நாங்கள் நல்லாய் அறிவோம்; என் மகள் உம்மையன்றி வேறெவரையும் தான் கல்யாணஞ் செய்வதில்லையென்று தன் தாய்க்குச் சொல்லியிருக்கிறாள்; நீரும் அப்படிச் செய்ய மறுக்க மாட்டீர் என்று நினைக்கிறேன்; அவளுக்கு ஒரு லட்சத்திற்குக் குறையாத பொருள் பண்டமுண்டு; நிலம் புலமுண்டு, வீடுவாசல் கடை கிட்டங்கி முதலியவைகளுமுண்டு; நீர் இருக்கும் இந்த வீடும் என் பிள்ளைக்கே உரியது; இவைகளைவிடப் பதினாயிரம் ரூபாவரையிற் பெறுமதியான ஆபரணங்கள் உண்டு; அவளுக்கென ஒரு காறும் வாங்கிக்கொடுக்க நினைத்திருக்கிறேன்; இனிமேலும் எனது உழைப்பெல்லாம் என் பிள்ளைக்கல்லாமல் வேறு யாருக்கு? ஆனதால் சீதனத்தைப்பற்றி எவ்விதமான சிந்தனையும் வேண்டியதில்லை; கல்யாண விஷயமாக நீர் ஒரு சதந்தானும் செலவிடவேண்டியதில்லை; நீர்வேறு என் பிள்ளைவேறு என்று நாங்கள் நினைத்து நடக்கவில்லை; நீங்கள் இரண்டு பேரும் இன்னமும் படித்துப் பரீட்சைகளிற் சித்தி பெற்றபின்புதான் உங்களுக்குக் கல்யாணஞ் செய்து வைக்கவேண்டுமென்பது என்னுடையவிருப்பம்; ஆனல் சொர்ணத்தின் தாய் இப்பொழுதே கல்யாணத்தை நிறைவேற்றிக்கொண்டு பின்னரும் படிக்கலாந்தானே என்ற நோக்கத்தோடிருக்கிறாள்; இதைப்பற்றி உம்முடைய எண்ணத்தைக் கேட்கும்படியாகத்தான் இப்பொழுது இங்கு வந்தேன்: இனி நீர் உம்முடைய பெற்றாரின் சம்மதத்தையும் பெற்றுத்தானே செய்தல் வேண்டும்; அப்படிச் செய்வதுதான் உமக்கும் எங்களுக்கும் எல்லாருக்கும் மரியாதையாகும்; மேலும், தம்பி, நீர் சென்ற விடுதலைக் காலத்தில் ஊருக்குப் போனபோது இதைப்பற்றி ஏதும் உமது பெற்றாருடன் பேசியதுண்டோ? உமக்குச் சம்மதமானல் அவர்களுக்குஞ் சம்மதந்தானே" என்று சொல்லி முடித்தார்.

பதில்

இராசசேகரன் சிறிது நேரம் யோசித்தான்; சொர்ணத்தில் அதிக அன்புடையன் என்பது எல்லாருக்குந் தெரியும்; சொர்ணமும் இக்காலத்து நாகரிகத்தை அநுசரித்து நடப்பவளென்பதையொழிய குணம் ஒழுக்கம் எல்லாவற்றிலுஞ் சிறந்தவள்; ஆங்கிலம் படித்தவள்; எந்தச் சபையிலும் எவரோடும் மரியாதையாக ஊடாடக்கூடியவள்; குடித்தனம் நடத்தும் பொறுப்பையு ணர்ந்தவள்; பேரழகுடையவள்; ஞானம்பிகையைக்காட்டிலும் இவள் எதிலுங் குறைந்தவளல்லள்; ஆனல் சீதன விஷயத்தில் மாத்திரம் ஞானம்பிகைக்கும் இவளுக்குமிடையில் ஆனைக்கும் பூனைக்குமிடையேயுள்ள பேதமுண்டு. சீதனம் அதிகம் உண்டு என்ற எண்ணம் இராசசேகரனுடைய உள்ளத்தில் உறைக்கப் புகுந்து விட்டது. விடுதலைக் காலத்தில் ஊருக்குச் சென்று ஞானம்பிகையையுங் கண்டபோது ஞானத்தையன்றி வேறு எவரையும் மணஞ் செய்வதில்லையென்ற திடத்துடன் இருந்தவன், மீண்டு கல்லூரிக்கு வந்து கிளாக்கருக்குரிய விடுதிவீட்டில் தங்கியிருக்கும் நேரத்தில் ஞானத்தை மணஞ் செய்வதோ சொர்ணத்தை மணஞ் செய்வதோ என்ற சந்தேகத்தோடிருந்தவன், இப்பொழுது கிளாக்கர் தம் மகளுக்குத் தரக்கொடுக்கவிருக்குஞ் சீதனத்தைச் சொல்லக் கேட்டமாத்திரத்தே, ஞானத்தைமறந்து சொர்ணத்தையே தான் கல்யாணஞ் செய்தல் வேண்டுமென்று தன்மனத்தில்நிச்சயித்தான். அப்படி நிச்சயஞ் செய்தானாயினும், தன் பெற்றோர் ஞானம் இருக்கும் வரையில் இதற்கு உடன்படமாட்டார்கள் என்பதை மறந்தானல்லன்; பெற்றோர் விருப்பத்தை மீறித் தான் நினைத்தபடி செய்யும் நோக்கம் அவனிடத்தில் இல்லை; இதனுற் பெருஞ் சங்கடப்பட்டான். ஆனுலும் தன் சிந்தனையைக் கிளாக்கருக்குக் காட்டாமல் "ஐயா, உங்கள் நோக்கத்திற்கு மாறுநடக்க எனக்கு விருப்பமில்லை; நீங்கள் சொல்வது முழுவதும் மெய்; உங்கள் மகளுக்கு நான் ஒரு போதுந் துரோகஞ்செய்யமாட்டேன் என் பெற்றாருக்கு இதைபற்றி இன்னமும் நான் ஒன்றும்வெளியிடவில்லை; இப்பொழுது நாங்கள் அவசரப்படவேண்டியதில்லையென்று நினைக்கிறேன்; இருவரும் படிக்கிறோம்; படித்துப் பரீட்சையிற் சித்திபெற்றபின் விவாகஞ் செய்வதே சந்தோஷமாகவிருக்கும்; விவாகம் எவ்வளவு வசதியாக விருந்தாலும் படிப்பிற்குப் பங்கம் செய்யுமென்பதை உங்களுக்கு நான் சொல்லவேண்டியதில்லை; ஆனதால் இன்னுங் கொஞ்சக்காலம் பொறுத்துச்செய்வதுதான் புத்தி" என்று சொன்னான்; இவற்றையெல்லாங் கேட்ட கிளாக்கரும் "தம்பி, நீர் சொல்லும் நியாயம் தக்கது" என்று கூறிவிட்டு அவனிடம் அநுமதி பெற்றுக்கொண்டு போனர்.

(வரும்)

என் காதலரைத்தவிர வேறு யாரையும் மணக்கமாட்டேன்

பதினறு வயதுள்ள ஒரு பெண் கோட்டிற் கூறிய வாக்குமூலம்

யாழ்ப்பாணம் நவ 13

சின்னையா வேலுப்பிள்ளை என்பவரும் அவருடைய மனைவி அண்ணுப்பிள்ளையும், தங்களுடைய 16 வயதான குமாரி தெய்வானைப்பிள்ளை என்ற தங்கம்மாவுக்குத் தங்களை கார்டியன்களாக நியமிக்கும்படி கோரிய வழக்குச் சனிக்கிழமையன்று யாழ்ப்பாணம்டின்றிக்கோட்டில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர்கள் கூறியதாவது:- சின்னத்தம்பி சுப்பிரமணியம் என்பவர் தமது மனைவியை இழந்துவிட்டார். அவருக்கு ஐந்து குழந்தைகள் இருக்கின்றன. அவருக்குச் சொத்தில்லை. அவர் தினச் சம்பளத் தொழிலாளி. அவர் 1939ல் அக்டோபர் 1ந் தேதியன்று எங்கள் பாதுகாப்பில் இருந்த எங்கள் குமாரி தங்கம்மாவைத் திருட்டுத்தனமாகக் கடத்திச் சென்றுவிட்டார். பின்னல் தங்கம்மா அவரிடமிருந்து மீட்கப்பட்டு ஊர்காவற்றுறை நீதிபதிதீர்ப்பின்மீது ரக்ஷண்யசேனைசுபரின் தேவதாசனின் பாதுகாப்பில் இருந்து வருகிருள். தங்கம்மாவை மணஞ்செய்வதே சுப்பிரமணியத்தின் நோக்கம்; அது தங்கம்மாளுக்குக் கேட்டை விளைவிக்கும். ஆகையால், அவளை எங்கள் வசம் ஒப்புவிக்க வேண்டுகிறோம்.

யுவதியின் வாக்குமூலம்

தங்கம்மா விசாரணையிற் கூறியதாவது:--

எதிர் மனுதார் சுப்பிரமணியம் எனது மூத்த சகோதரியை மணஞ் செய்ய விரும்பினர்; என்பெறறோர் அதற்குச் சம்மதிக்க மறுத்துவிட்டனர். ஆதலால் நான் அவரை மணந்துகொள்ளச் சம்மதித்து அவருடன் சென்றேன். அப்படி அவருடன் செல்வதற்கு எனது பெற்றோரின் சம்மதத்தைக் கேட்கவில்லை.

நான் எதிர் மனுதாரரையே விவாகஞ்செய்துகொள்ள விரும்புகிறேன். நான் விவாகஞ் செய்துகொள்ளும்படி ஏற்பட்டால அவரையே மணப்பேன்."

குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணையில் தங்கம்மா கூறியதாவது:-

"நான் எதிர்மனுதாரரைக் காதலிக்கிறேன்; அவருக்குக் கடிதங்கள் எழுதியிருக்கிறேன். நான் அவருடன் ஓடிப் போவதற்குமுன் அவருடன் பேசிக்கொண்டு மட்டும் இருந்திருக்கிறேன்.

எனது உறவினராகிய கந்தசாமியை எனக்குத் தெரியும். நான் அவரைக் கலியாணஞ் செய்துகொள்ள விரும்பவில்லை. அவர் ஒரு ஷாப்பில் வேலைபார்த்தாலுங்கூட அவர் அங்கு ஒருமாதகாலத்திற்கு மேல் தங்கியிருக்கமாட்டார். அவர் தமது பெற்றோர்களுக்குக்கூடக் கடிதங்கள் எழுதுவது கிடையாது. அவர் எனக்குத் தகுந்த கணவரல்லர்.

அவரை மணக்கும்படி எனது தாயார் என்னைப் பலவந்தப்படுத்தினுலும் கூட நான் அவரைக் கலியாணஞ் செய்துகொள்ளமாட்டேன். எதிர்மனுதார் சுப்பிரமணியத்தைத் தவிர வேறு யாரையும் மணந்துகொள்ள நான் விரும்பவில்லை. நான் எதிர்மனுதாரரின் 5 குழந்தைகளுக்கும் மாற்றுத்தாயாக இருக்கவிரும்புகிறேன்."

வழக்குமுடிவில் டிஸ்திறிக் நீதிபதி திரு. வி. குமாரசுவாமி, 2வது எதிர் மனுதாரரான தங்கம்மாவை அவளுடைய பெற்றோர்கள் வசம் ஒப்புவிக்கும்படி உத்தரவிட்டுத் தமது தீர்ப்பிற் கூறியதாவது:-

"தனதுமனம்போல்விருப்பமுள்ள எத்தகைய ஆடவனுடன் ஓடிப்போகும் மைனர் யுவதி விரும்புவதுபோல் கோடு பாதுகாப்பு அளித்தாற் சமுகத்திற்கே கேடு உண்டாகும்."

பாலாவிக் கொலைத்தன வழக்கு

எதிரிக்கு இரண்டு வருடக் கடுங்காவற்றண்டனை

14-11-39

பூநகரி டிஸ்திறிக்கைச் சேர்ந்த பாலாவி என்னுமிடத்தில் வசிக்கும் பொன்னையா கதிரேசு என்பவரை நாகூர் லத்திவ் என்னும் முகமதியன் கத்தியாற் குத்திக் கொலை செய்ய எத்தனித்ததாகக் குற்றஞ்சாட்டிய வழக்குச் சுப்றீங்கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணைக்கு எடுக்கப்பட்டதும், எதிரி தான் குற்றவாளி யென்றும் காயக்காரனும் அவரைச் சேர்ந்தவர்களும் தன்னை அடித்துத் தொந்தரவுசெய்தமையால் தன்னுல் அவர்களின் தொந்தரவைப் பொறுக்கமுடியாது சந்தியால் ஏற்பட்ட கோபத்தால் கத்தியாற் குத்தினதாயும், தனக்கும் காயக்காரன்பக்கத்தாருக்குமிடையே விரோதம் ஏற்பட்டது. காயக்காரன் பக்கத்தார் களவாகக் காட்டுமரங்கள் வைத்திருந்ததாகிய முறைப்பாட்டிற் தான் அவர்களுக்கு மாறாகச் சாக்ஷியங்கூறினதினலே என்பதை அங்கு சமுகமாயிருக்கும் அவ்வூர் மணியகாரனிடம் விசாரித்தால் அவர் கூறுவாரென நினைக்கிறேன் என்று கூறினன். நீதியாசர் அவ்வூர் மணியகாரன் சின்னத்தம்பி நாகநாதர் என்பவரிடம் விசாரணை செய்த பின்னர் எதிரிமீது சாட்டப்பட்ட குற்றத்தினும் குறைந்த குற்றச்சாட்டாகிய கைபிழைபாடாகக் கொலை செய்ய எத்தனித்ததாகிய குற்றச்சாட்டிற்கு நீ குற்றவாளி யென்பதைத் தானே ஒத்துக்கொள்வதெனக் கேட்க அவன் ஆமெனக் கூறினன். எதிரி இதற்கு முன்னர் இதுபோன்ற குற்றச்சாட்டில்லாத வேறு ஏழு குற்றச்சாட்டுகளில் தண்டனை பெற்றதையும் ஒத்துக்கொடுத்தான். நீதியாசர் எதிரிக்கு இரண்டு வருஷக் கடுங்காவற் றண்டனை விதித்தார்.

ந-3

கடலுக்குப்பலியான ஆசிரியர்

வெள்ளவத்தைக்கருகில் நடந்த பரிதாப மரணம்

ஆனந்தாக் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியரான திரு எச். ஈ. ஐ. ஏகநாயகா சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று வெள்ளவத்தைக்கப்பாற் கடலிற் குளித்துக்கொண்டிருக்கும்பொழுது நீரில் மூழ்கி இறந்தார். அவருடன் ஸ்நானஞ் செய்துகொண்டிருந்த வேறு இருவரும் நீரோட்டத்தால் இழுத்துச் செல்லப்பட்டனர். ஆயின், மிகுந்த கஷ்டத்துடன் அவ்விருவரும் காப்பாற்றப்பட்டனர்.

திரு ஏகநாயகாவைக் காப்பாற்றுவதற்கு முயற்சிக்கப்பட்டாலும், அவர் நீரோட்டத்தால் துரிதமாக அடித்துச் செல்லப்பட்டுத் திடீரென்று மறைந்து போனமையால் அம்முயற்சி பயனற்றுப் போயிற்று. ஏறக்குறைய அரைமணி நேரத்துக்குப் பின், அவர் ஒரு கொன்ஸ்டபிளாற் கரைசேர்க்கப்பட்டு ஆரம்ப சிகிச்சை செய்யப்பட்டது. உடனே பெரிய ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு "இரும்புச் சுவாசயந்திரத்தில் அரைமணி நேரம் வைக்கப்பட்டார். ஆயின், அவர் உயிர்நீத்தார்.

ஞாயிற்றுக்கிழமை மாலை வெள்ளவத்தைப் பொலிஸ் சவச்சாலையில் அவரது மரணம் பற்றிய விசாரணை நடைபெற்றது. நீரில் மூழ்கியதால் திரு. ஏகநாயகா மரணமடைந்தாரென்று நகர மரணவிசாரணை உதவி அதிகாரி தீர்ப்புக் கூறினர்.

கேரள வெப் சோப்
சருமத்திற்கு உற்சாகம் விளைக்கக் கூடிய உயர்தரமானது
அழகான பெண்களுக்குரிய சோப்
எங்கும் கிடைக்கும்
ஏஜென்ஸ்: தேவார் அன் கம்பனி, மெயின் ஸ்ரீட், கொழும்பு
Mis 159, 71-11 38—

KERALA
Vep
SOAP
KERALA SOAP INSTITUTE, CALICUT.

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரைவுளது)
அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா **500,000.**
ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்
வங்கித்தொழிலும் வியாபாரமும் இலாபகரமாய் நடக்கின்றன.
தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிரந்தரமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!
வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.
(வி)
(Y. 182. 1-11-38 to 31-10-39)

தயவுசெய்து எமக்கெழுதுங்கள்!
தூய்மையான கஸ்தூரி, சுத்தமான காஷ்மீர்க் குங்குமப்பூ, பரிசுத்தமான முத்து, சுத்தமான கோரோசனை, சிலாசத்து, அம்பர்கிரிஸ், பச்சைக் கர்ப்பூரம், பொன் வெள்ளி இலைகள் இவைபோன்ற வேறு விலையுயர்ந்த பொருள்களும் மருந்து வகைகளுக்கு வேண்டிய அருமையான மூலிகைகளும் தேவைப்படும் போது எங்களுக்கு எழுதுங்கள். பிரசித்தி பெற்ற டாக்டர்களும் வைத்திய நூலறிஞர்களும் எமது சரக்குகளை ஆராய்ந்து அவை மிக்க திருப்தியளிப்பவை என்றும் திறமானவையென்றும் கண்டிருக்கின்றனர். அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கும் மகாராஜாக்களின் பிரதான டாக்டர்களுக்கும் நாமே இவற்றை உதவி வருகிறோம்.
பூரண விபரங்களை அறிய விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதுக:-
பாலா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர் செய்யப்பட்டது)
கஸ்தூரி & பெருங்காய வியாபாரிகள், ஆயூர் (ஜலுந்தர்) பஞ்சாப்
(Y. 64. 14-6-39—13-6-40) வி.

இந்துக்கள் கையில் இருக்கவேண்டியது
இந்துசாதனமே

சாலாமிஸ்திரி லேகியம்
இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.
இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாஞு, சாலாமுஸ்லி, சப்பேமுத்வலி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பு, லங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.
இதனால் நீரழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூளைச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால் மேற்சொல்லியவியாதிகள் குணமடைவதுடன் சூதகவாயு பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.
இந்த லேகியத்தின விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா **20.** அரைருத்தலுக்கு ரூபா **10** கால்ருத்தலுக்கு ரூபா**5** தபாற்செலவுபிரத்தியேகம் சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாய் இராச்சியப்பகுதிக்கு வீ. பீ சட்டம் இல்லாததனால் மூன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.
இங்ஙனம்,
க. ஆறுமுகப்பிள்ளை
ஸ்ரீ. சிவஞான ஆரோக்கிய வைத்தியசாலை.
வீட்டிலக்கம் 33 பழையவாடிரோட்டு, கோட்டைமுனை, மட்டக்களப்பு, சிலோன்.
(Y 14-6-39 to 31-12-39)

யுத்த சமாச்சார வியாக்கியானம்

(மூன்றும்பக்கத் தொடர்ச்சி)

இங்கே இவ்விதமாக, ஜேர்மனியிலே இதற்கு மாறுன காரியங்களே நடக்கின்றன. அவுஸ்திரியாவிலே குழப்பங்கள் ஏற்பட்டதாகவும் இராணுவ வீரர் அடக்கமின்றிக் கலகம் பண்ணுவதாகவும் செய்திகள் வெளியாயின. சுதந்திரத்தையிழந்த அவுஸ்திரியர் ஜேர்மனியின் அக்கிரமப் போரை எவ்விதம் ஆதரிப்பார்கள்? அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இனி, ஹிற்லர் யூதர்பாற் காட்டி வந்த சீற்றத்தை இப்பொழுது கத்தோலிக்க திருச்சபையிலும் செலுத்தத்தொடங்கியிருக்கிறார். இதுவும் அவருக்கு நன்மையைத் தராதென்பதைச் சான்றோர் மறுப்பரோ?

அறமே வெல்லுமென்பதையும் அறச்செயல் யாவர்மாட்டுளது என்பதையும் நாம் இருந்தறிவோம். மனுஷ சமூகத்தின் நன்மைக்கேற்ற சமாதானத் திட்டங்களை வகுத்துக் கொள்வதன்றி எவ்விதத்திலாவது சமாதானம் வரட்டுமென நினைப்பது பொருந்தாது. அப்படி நினைப்பது நேசதேசங்களின் தருமநோக்கங்களுக்கு மாறுகும். அதனாலே ஐரோப்பிய நாகரிகமுமழிந்து உலகம் முழுவதுமே பெரிதும் வருந்த நேரிடும். இனி நாசிக்கொள்கைகளும் சோவியற் கொள்கைகளும் வெவ்வேறானவையென்றாலும் உண்மையாகக் கூர்ந்து நோக்குமிடத்து அவைகளுக்குள் ஒற்றுமைகள் பலவுள. தனிப்பட்டவர்களின் சுதந்திரம், சுயாதீனம், மதக்கோட்பாடுகள், சிறுபான்மையினரின் உரிமைகள் என்றுமிவைகளை நாசி சோவியத் தத்துவங்கள் இரண்டும் நாசஞ் செய்வனவாகும். இத் தீமையை ஒழித்து உலக சமாதானத்தை நிலைநாட்டப்போராடும் நேசதேசங்கள் வெல்லக்கடவன. இச்சமாதானமும் விரைவில்வருமென நம்பவேண்டியிருக்கிறது. ஏனெனில் பெல்ஜிய ஹொல்லாந்து நாடுகளிரண்டும் உலகசமாதானத்திற்குரிய அறிக்கையொன்றைப் போர்புரியும் வல்லரசுகளுக்குப் போக்கியிருக்கின்றன. ஹிற்லர் முதலியோர் அவ்வறிக்கையை மிகவும் கருத்தாகப்பட்டிருக்கின்றனர். இதன் விளைவு நன்றுமாறு தெய்வந் துணைபுரிவதாக.

Nº 361

மலேறியாவுக்கு
நியாயத்துக்கு ஒத்துக்கொள்ளக்கூடிய மாற்று மருந்து
பைரெக்ஸ்
நீடித்தகாலமாகப் புகழ்பெற்று விளங்கும் நம்பியிருக்கத் தகுந்த
காலவரையறைவு குறைவான கலவை.
பெங்கால் கெமிக்கல்
கல்கத்தா, பம்பாய்.
ஏஜென்ஸ்:
தேவார் அன் கோ,
மெயின் ஸ்ட்ரீட், கொழும்பு.
(Mis 159. 10-9-37—

சிறந்த தேக்கு
குறைந்த விலையில்
பல்வேறு சைஸில் மிகச்சிறந்த றங்கூன் தேக்கங் குற்றிகள், சிறு துண்டுகள், பலகைகள் ஆகியவை புதிதாக இப்போதுதான் கப்பலில் வந்திருக்கின்றன.
'பவுண்மார்க் ஓடுகள்.' ஓடுகளின் ராசா என்று சொல்லத்தக்கது. வேறிடங்களில வாங்குதற்கு முன் தயவு செய்து "பவுண்மார்க்" ஓடுகளை உபயோகிப்போரிடம் விசாரித்துப் பாருங்கள். "குணம் பேசும்" மார்க்கட்டில் இதற்கிணையான ஓடுகிடையாது.
பினங்குக்கும் சிங்கப்பூருக்கும் கப்பல்டிக்கட்டுகள்.
கொழும்பு விலையில், மூன்றும் வகுப்பு டிக்கட்டுகளும் ஏனையவகுப்பு டிக்கட்டுகளும் இங்கு விற்கப்படும். கப்பல் புறப்படும் திகதிகளுக்கும் ஏனைய விபரங்களுக்கும் கீழ்க்காணும் விலாசத்திற்கெழுதுக.
எஸ். வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்
டெலிபோன் இல. **93** யாழ்ப்பாணம்
வி Y 49 12-8-38—11-8-39

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna or Thursday 16th November 1939.